Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 09 ஞாயிற்றுக்கிழமை [25-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:206

# வன்னியில் நிலைமை மோசம் அடைகிறது!

## உணவு, வைத்திய வசதிகள் இன்றி மக்கள் பெருமளவில் பாதிப்பு

வவுனியா, ஜூலை 25

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையில் போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறப்பதில் இருந்து வரும் தடங்கல் காரணமாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் பெரும் உணவுத்தட்டுப்பாடும் உயிரிழப்புகளும் ஏற்படும் அபாயம் உருவாகிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே குறைந்தளவு பொருள்கள் மட்டும் அனுப்பப்பட்டு வந்த இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் இருந்து வரும் போக்குவரத்துத் தடையால் பெரும் பட்டினி நிலைமை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரிசி, மா, சீனி, குழந்தைகளுக்கான பால்மா வகைகளுக்கும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

பால் குடிக்கு ழந்தைகள், இடம் பெயர்ந்தோரே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தற்போதைய நிலைமை நீடித்தால் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் அபாயம் ஏற்படும் என்றும் கூறப்படுகிறது.

மருத்துவச் சிகிச்சை பெறுவதற்காக வவுனியா செல்ல

(12 ஆம் பக்கம் பாக்க்க)

## மாத்தளைப் பகுதியில் 2 மின்மாற்றிகள் தகர்ப்பு

கொழும்பு, ஜூலை 25

மாத்தளை நாகல்ல வீதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இரு மின் மாற்றிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலிருந்த இந்த மின்மாற்றிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டமை குறித்து பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த மின் மாற்றிகள் தகர்ப்பினால் 15லட்சம் ரூபாவுக்கு சேதமேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## தேடுதல்

கொழும்பு, ஜூலை 25

மட்டுநகர் தாண்டவன் வெளிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை படையினரால் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வீடு வீடாக இடம்பெற்ற இத்தேடுதலின் போது பெண் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## கொழும்பில் எண்மர் கைது

கொழும்பு, ஜூலை 25

கொழும்பு தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் படையினரும் பொலீஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தத் தேடுதலின்போது எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரியவருகிறது. (இ-5)

## தாமதித்து வந்த விமானம்

இரத்மலானையில் இருந்து பலாலிக்கான மூன்றாவது பயணிகள் விமானச் சேவையில் நேற்று தாமதம் ஏற்பட்டதால் பயணிகள் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு அருகில் உள்ள ஓ. எல். ஆர். பாடசாலையில் நேற்று இரவு தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று மாலை 6. 30 மணிக்கே இந்த விமானம் இரத்மலானை விமான நிலையத்தில். இருந்து புறப்பட்டது.

பயணிகள் யாழ். நகர்வந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு சோமாலியாவாக வன்னிப் பெரு நிலப்பரப்பு

### ஜனாதிபதிக்கு ஒன்றியம் மகஜர்

வவுனியா, ஜூலை 25

உலகின் இன்னுமொரு சோமாலியாவாக வன்னிப் பெருநிலப்பரப்பு மக்கள் மாறும் நிலை ஏற்படப் போகின்றது.

மேற்கண்டவாறு பட்டிப்பளை பிரதேசசபை வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் ஜனாதிபதி சந்திரிக்காவுக்குஅனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டிப்பளைப் பிரதேச சபை வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கடந்த 21 ஆம் திகதி நடத்திய கண்டனப் பேரணியின் இறுதியில் இந்த மகஜர் ஜனாதிபதிக்காக பட்டிப்பளைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிருபைராஜாவின் பூதவுடல் நாளை யாழ். வருகிறது

### செவ்வாயன்று இறுதிச் சடங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 25

புளொட் அமைப்பின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரும் அந்த அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமான செல்லையா கிருபைராஜாவின் பூதவுடல் வவுனியாவில் இருந்து நாளை யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளது.

இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொட்டடி வில்லூன்றிமயானத்தில் நடைபெறும்.

கொழும்பிலிருந்து நேற்றிரவு வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட கிருபைராஜாவின் பூதவுடல் இன்று காலை வவுனியா வைரவப் புளியங்குளத்தில் புளொட் அமைப்பின் மாவட்டத் தலைமையகத்தில் வைக்கப்பட்டு பின்னர் மக்கள் அஞ்சலிக்காக வவுனியா நகரசபை மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆய்வுகூட ஊழியர்கள் நேற்றும் வெளிநடப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் நேற்று இரண்டாவது நாளாக கடமையில் ஈடுபடாது வெளிநடப்புச் செய்தனர்.

இதனால் நோயாளர்களில் இருந்து பரிசோதனைக்கென எடுக்கப்பட்ட இரத்தம் மற்றும் பரிசோதனைப் பொருள்கள் நேற்று இரண்டாவது நாளாக பரிசோதனை செய்யப்படவில்லை.

ஆய்வுகூடத்துடன் இருக்கும் பிரேத அறையில் இருந்தும் இன்னும் துர்நாற்றம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் சிப்பாய் பலி

மட்டக்களப்பு, ஜூலை 25

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் வாழைச்சேனை வீதியிலுள்ள வந்தாறுமூலை தபால் கந்தோர் அருகில் வாகனத் தொடரணி மீது இந்தத் தாக்குதல் நடத்தப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈடுசெய்ய முடியாத இழப்பு புளொட் அமைப்பு அறிக்கை

தமிழ்த் தேசிய இனத்தின் போராட்ட வரலாறும் இழப்புக்களும் எமது தேசமும், மக்களும் இலகுவில் மறந்துவிடக் கூடியவை அல்ல. இந்த வரலாற்றில் தோழர் கிருபாவின் இழப்பும் ஈடுசெய்ய முடியாத தொன்றாகும்.

மேற்கண்டவாறு புளொட் அமைப்பின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று நாட்டில் நிலவுகின்ற அர்த்தமற்ற இனவாத யுத்தத்துக்கெதிராக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்துச் சமூக மக்களையும் அணிதிரட்டி தமிழ்த்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வான் புரண்டது:

## கதிர்காம யாத்திரை சென்று திரும்பியோரில் நால்வர் பலி!

மட்டக்களப்பு, ஜூலை 25

அம்பாறை இங்கினியகலப் பகுதியில் நேற்றுக் காலை 9. 30 மணியளவில் ஹைஏஸ் வான் ஒன்று வீதியைவிட்டு விலகி புரண்டதில் அதில் பயணம் செய்தவர்களில் இரு குழந்தைகள் உட்பட நால்வர் பலியானார்கள். 15 பேர் காயமடைந்தனர்.

மட்டக்களப்பிலிருந்து கடந்த வியாழக்கிழமை இந்த வானில் கதிர்காமத்துக்கு யாத்திரை சென்றவர்கள் திரும்பிவரும் பொழுதே இந்த விபத்து நிகழ்ந்தது.

இந்த விபத்தில் இறந்தவர்களின் சடலங்கள் அம்பாறை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர்களில் ஆறு ஆண்களும் ஐந்து பெண்களும் இந்த ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-5)

## வவுனியா ஆசிரியர்கள், அதிபர்கள் வேலைநிறுத்தம் செய்ய முஸ்தீபு!

### பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 25

1998 ஆம் ஆண்டுக்கான இடர்காலக் கொடுப்பனவு உடனடியாக வழங்கப்பட வேண்டும். எதிர்வரும் புதன் கிழமைக்கு முன்னர் இதற்கு உறுதியான பதில்கிடைக்காது விட்டால் வவுனியா மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களும் அதிபர்களும் வேலை நிறுத்தத்தில் குதிப்பர்.

மேற்கண்டவாறு இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கம், சுயாதீன ஆசிரியர் சங்கம், இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், அதிபர்கள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்று வவுனியா மகா வித்தியாலயத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளைத் தலைவர் ஆர். இந்திரன், செயலாளர் கே. சிவஞானம், வவுனியா இஸ்லாமிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதி முத்து முகமட், சுதந்திர ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளைச் செயலாளர் எஸ். சற்குணராசா, மத்திய குழு உறுப்பினர் எம். ஜஸ்டின், அதிபர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எங்கள் எல்லோரது இதயங்களிலும் நீங்காதிருக்கும்

## திருமதி R. S. துரைசிங்கம்

(முன்னாள் தாதிய உத்தியோகத்தர்)


அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி

(67715)

# நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
09
—
03
—
1910



விண்ணில்
05
-
08
-
1998

## அமரர் வைரவப்பிள்ளை வெற்றிவேல்

திதி: 25 - 07 - 1999

ஆண்டு ஒன்று போனாலும் எம் நினைவில் என்றும் நிலைத்து நிற்கும் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

பூதவராயர் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(சி/8295)

# மரண அறிவித்தல்கள்

## இராமநாதர் தர்மலிங்கம்

(தர்மர்)

நெடுந்தீவு 14 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை பாண்டியன்தாழ்வு, 27/15 நாகராசா லேனை வதிவிடமாகவும் கொண்ட இராமநாதர் தர்மலிங்கம் 24-07-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதர் - வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற இராசேந்திரம், பொன்னையா, வைரவநாதன், திருமதி கண்மணி நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி ஜெகதீஸ்வரி பொன்னையா, திருமதி வைரவநாதன் பரமேஸ்வரி, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (25-7-99) காலை 10.00 மணியளவில் துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

நாகம்மா மனுவேற்பிள்ளை
(மாமியார்)
ஜெகதீஸ்வரி பொன்னையா
(மைத்துனி)

27/15, நாகராசா லேன்,
பாண்டியன்தாழ்வு,
கொழும்புத்துறை.

(67711)

## சிவம் பண்டாரம் ஐயாத்துரை

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி பாய் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவம் பண்டாரம் ஐயாத்துரை நேற்று 24—07—99 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மங்களத்தின் அன்புக் கணவரும், சிவநேசராசா, வரவேஸ்வரன் (ஈசன்ஸ்), காலஞ்சென்ற மங்களேஸ்வரி, ஜெகசோதிமலர் (கொழும்பு), முருகையா (ஈசன்ஸ், நுணாவில்), காலஞ்சென்ற ஜெயம், அருந்ததி, திருவருள் (கட்டார்), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஓம் பிரகாஷ் (கொழும்பு), சாந்தி (கொழும்பு), நாகேந்திரம் (ஓம் ரெக்ஸ், யாழ்), தயாபரன் (ஓம் ரெக்ஸ், யாழ்), ராஜலட்சுமி, செல்வி (திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் கேதீஸ்வரன், பவித்திரா, யாழிதரா, லக்ஷிதா, கிருத்திகா, சுஜந்தன், டிலோசா, தனோஜன், மிதுனாளினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-07-99) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாவற்குழி பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

ஐ. வரவேஸ்வரன்
(ஈசன்ஸ்)

நாவற்குழி.

(67714)

# நன்கொடை

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 89 சன சமூக நிலையங்களில் தற்போது செயற்படும் நிலையங்களுக்கு இவ் வருடத்திற்குரிய நன்கொடை வழங்கப்படவுள்ளன.

'ஏ' தரத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கு தலா ரூபா ஆயிரமும்—

'பி' தரத்திலுள்ள சன சமூக நிலையங்களுக்கு தலா ரூபா 600 வீதமும் வழங்கப்படவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா தெரிவித்தார்.

தற்போது இயங்குகின்ற நிலையங்கள் தமது நிலைய பதிவேடுகள், ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறும். சன சமூக நிலையங்களுக்குரிய கொடுப்பனவுக்கென ரூபா 69 ஆயிரம் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# பழுதடைந்த பருப்பு கொழும்புக்கு

பழுதடைந்த 30 மெற்றிக் தொன் பருப்பு கப்பல் மூலம் மீண்டும் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

துறை முகத்தில் பொருள்களை இறக்கி முடித்த ''இந்துருவலி'' என்ற கப்பலில் இப்பருப்பு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ். தனியார் வர்த்தகர் ஒருவரால் எடுத்துவரப்பட்ட முப்பது மெற்றிக் தொன் பருப்பே இவ்வாறு கொழும்புக்கு திருப்பி எடுத்துச் செல்லப்பட்டது.

இதேவேளை—

யாழ். குடா நாட்டில் சதோச, கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் கடைகள் என்பனவற்றில் பருப்பு போதியளவு கையிருப்பில் உள்ளது. (ஐ-173)


## விற்பனைக்கு

- ஆடம்பரக் கார்
- VESPA ஸ்கூட்டர்
- ஆட்டுக்கடா

286, ஆனைப்பந்தி
வைத்தியசாலை
முன்பாக,
யாழ்ப்பாணம்.
(67717)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று
பார்த்தீபன் நடித்த
அந்தப்புரம்
( புதிய வெளியீடு )
நேரம்; 10-30, 2-30
(67708)

## ராஜா

யாழ்ப்பாணம்
பிரபுதேவா - கஜோல்
மற்றும் பலர் நடித்த
மின்சாரக் கனவு
10-30, 2-00, 5-00
[சி/8281]

## நாகம்ஸ்

சுன்னாகம்
ரஜனி - குஷ்பு – ஜனகராஜ்
நடித்த
பாண்டியன்
[illegible]
[67713]


# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் கணேசன்

சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த சுப்பிரமணியம் கணேசன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சௌந்தரம்மா தம்பதிகளின் புதல்வரும் லோகராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சபாரத்தினம் இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும். லோகேஸ்வரன் (Norway), துஷாந்தா (U. K) ஆகியோரின் அன்புத் தந்தையும் வித்தியா சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தேசிகா, சுவேகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25 - 7 - 99 ஞாயிறு காலை 10 மணிக்கு கொத்தியாலடி மயானத்தில் நடைபெறும்

தகவல்:

லோகராணி
(மனைவி)

(சி/8296)

## P. C. ஜோசப் வேலு

P C. ஜோசப் வேலு கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் கில்டா ஜோசப்பின் அன்புக் கணவரும் சாந்தி, யோகேந்திரன், பாமா, ராதிகா, பிரகாஷ், சுரேஷ், சதேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகுமார், மெரினா, நாகேந்திரன், இரட்ணராஜா, செல்வி, சுபா, டொறிஸ் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் தெகிவளை கல்கிசை சேமக்காலையில் இன்று(25-07-99) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறும்.

தகவல்:

ஜோசப் சதேஷ்குமார்

126/2, கொழும்புத்துறை லேன்,
பாண்டியந்தாழ்வு.

(67709)

## நீற்றா சரஸ்வதி துரைசிங்கம்

[ஓய்வுபெற்ற பிரதம தாதி, அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி].

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட நீற்றா சரஸ்வதி துரைசிங்கம் அவர்கள் 23-7-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் S. துரைசிங்கத்தின் (ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர் சுகாதார அமைச்சு) அன்பு மனைவியும், கிரியா (ஆஸ்திரேலியா), ஜெயபவானி (பிரான்ஸ்), துஷ்யந்தி (சாவகச்சேரி), தயாளன் (இந்தியா), அமலதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ம. மனோரஞ்சிதம், எட்வாட் வென்செஸ்லாஸ் ரஞ்சித் (பிரான்ஸ்), காலஞ்சென்ற R. W. சுமணபாலா (பொலீஸ் இன்ஸ்பெக்டர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கவிதா (கொழும்பு செண். பெனெடிக்ற் கல்லூரி), மைக்கேல் நளின் (யா/சா. டிறிபேக் கல்லூரி சிரேஷ்ட மாணவன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-7-99) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி லிகோரியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

S. துரைசிங்கம்
(கணவர்)

சங்கத்தானை,
சாவகச்சேரி.

(67701)

## பாஸ்டர் சீ. கே. லாசரஸ்

(சர்வதேச தலைமைப் பாஸ்டர், இலங்கை பெந்தேகொஸ்தே சபை)

இலங்கை பெந்தேகொஸ்தே சபையின் சர்வதேச தலைமை பாஸ்டராகக் கடமையாற்றிய பாஸ்டர் சீ. கே. லாசரஸ் அவர்கள் 22 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று மகிமைக்குள் பிரவேசித்து விட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 28 ஆந் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு சென்னையிலிருக்கும் (இந்திய) பெந்தேகொஸ்தே சபை தலைமைப் பீடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை யாவருக்கும் அறியத்தருகின்றோம்

தகவல்:

பாஸ்டர் ஆ. மகேந்திரன்
இலங்கை பெந்தேகொஸ்தே சபை,
இல. 111, கண்டி வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(67891)

## திருமதி சுப்பிரமணியக்குருக்கள் மீனாம்பாள்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட மீனாம்பாள் வெள்ளிக்கிழமை அதிகாலை மட்டக்களப்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் பறாளாய் முத்துசாமிஐயர் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற சுழிபுரம் சுப்பிரமணியக் குருக்களின் அன்பு மனைவியும் சரவணபவானந்தசர்மா (சக்தி நூல் நிலையம், மட்டக்களப்பு) விமலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சௌபாக்கிய லட்சுமி (அம்பிகா), ந. பத்மநாப சர்மா (ஆனந்தம்—பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்திகோயில்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டக்களப்பில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:

திருமதி விமலா பத்மநாப சர்மா
(மகள்)

மட்டக்களப்பு முகவரி:
இல. 6, சுப்பையா வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல. – 065-24550

22, பிறவுண் றோட்,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

[67712]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும் பொருள்கள் சேகரிப்பில் மாணவரை ஊக்குவிக்க திட்டம்

பருத்தித்துறை, ஜூலை 25

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள கலை, கைப்பணி, பாரம்பரியத்துடன் சம்பந்தப்பட்ட அரும் பொருள்கள் சேகரித்துப் பேணப்படவேண்டுமென மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா அறிவித்துள்ளார்

சகல பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் இந்த அரும் பொருள்களைக் கூடிய அளவில் சேகரிக்க வேண்டும். இவ்வாறு கூடுதலான பொருள்கள் சேகரிப்பவர்களை இனங்கண்டு இலக்கிய விழாவில் கௌரவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீட்டுப்பாவனைப்பொருள்களான ஆபரணங்கள், உலோக வேலைகள், செதுக்கல் வேலை, மட்பாண்டம், கடல்படு பொருள்கள், பனம்பொருள்கள், தும்புப் பொருள்கள், இசைக்கருவிகள், நெசவுப் பொருள்கள், தைத்த ஆடைகள் முதலியனவற்றைச் சேகரிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சகல வலயக் கல்வித் திணைக்களங்களுக்கும் கலாசார உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இக் கலாசார உத்தியோகத்தர்கள் பாரம்பரிய கலை கலாசார பொருள்களைச் சேகரிக்க உதவுவர் எனவும் பின்னர் அவற்றின் கண்காட்சி வலய மட்டம், மாவட்ட மட்டத்தில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-118)

---

## 4ஆம் ஆண்டு நினைவு கூருகின்றோம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 — 09 — 1957 | 24 — 07 — 1995 |

செல்வி

### விமலா செல்வநாயகி தம்பிநாயகம்

''சகலமும் அவராலும் அவர் மூலமாயும்
அவருக்காகவும் இருக்கிறது;
அவருக்கே மகிமை உண்டாவதாக''

உரோ: 11-36

— குடும்பத்தினர்

நவாலி தெற்கு, மானிப்பாய்.

(67892)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி இராசையா சின்னம்மா

தோற்றம்: 25 07-1922

மறைவு: 25 06-1999

அன்புத் தெய்வமே! எங்கள்
குடும்பத்தின் ஒளி விளக்கே!
பண்பின் சிகரமே பாசத்தின் உறைவிடமே
நீங்கள் எம்மை விட்டு மாதமொன்று
சோகமுடன் மறைந்தாலும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும்
அணையாத தீபமாய் ஒளி வீசும்

எங்கள் அன்புத் தாயின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இராஜபவனம், அங்கிலிப்பாய்,
இணுவில் கிழக்கு.

(67683)

---

# பாடசாலை மாணவரிடையே கணித- விஞ்ஞானப் போட்டி

வலிகாமம்தெற்கு, ஜூலை 25

21 ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான தொழில்நுட்பவியலில் தோற்றப்போகும் சவால்களை எதிர்கொள்ளும் முகமாகவும் கணித—விஞ்ஞான கற்றல் சர்பித்தலை மேம்படுத்தும் நோக்கத்துடனும் வடக்கு—கிழக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆய்வு அபிவிருத்தி அலகு பாடசாலை மாணவர்களுக்கிடையே கணித—விஞ்ஞான வினாவிடைப் போட்டி ஒன்றை இவ்வருடம் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப் போட்டி பாடசாலை மட்டம், வலய மட்டம். மாகாண மட்டம் ஆகிய நிலைகளில் நடைபெறும் என வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் சு. டிவகலாலா அறிவித்துள்ளார்.

வலய மட்ட, மாகாண மட்டப் போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

6, 7, 8 ஆம் தரங்கள் முதற் பிரிவிலும் 9, 10, 11 ஆம் தரங்கள் இரண்டாம் பிரிவிலும் 12, 13 ஆம் தரங்கள் மூன்றாம் பிரிவிலும் அடங்கும்.

கணித—விஞ்ஞான வினாவிடைப் போட்டிகளைப் பாடசாலை மட்டத்தில் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பு நடத்தி முடிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வலய மட்டத்திலான போட்டிகள் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்பும் மாகாண மட்டத்திலான போட்டிகள் நவம்பர் மாதம் ஆறாம் திகதியும் நடைபெறும்.

மாகாண மட்டப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் அதிக புள்ளிகள் பெறும் இரு குழுக்கள் தெரிந்தெடுக்கப்பட்டு முதற்குழுவுக்கு வடக்கு—கிழக்கு மாகாணக் கௌரவ ஆளுநரின் வெற்றிக் கேடயமும் சான்றிதழ்களும் பரிசாக வழங்கப்படும்.

ஒவ்வொரு பிரிவிலும் அதி உயர் புள்ளிகளைப் பெறுபவர்களுக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரின் வெள்ளிக் கிண்ணமும் சான்றிதழ்களும் பரிசுகளாக வழங்கப்படும். (ஐ-152)

## கூட்டம்

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசாரக் கழகத்தின் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ஐ-180)

---

# கேள்வி அறிவித்தல்

## பருத்தித்துறை நகராட்சி மன்றம் மீன் சந்தை கட்டட அமைப்பு வேலை இரண்டாம் கட்டம்

கீழ்குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் பருத்தித்துறை நகரசபைத் தலைவரினால் 1999 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீலனைக்கெடுக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பிப்பவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தால் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் 8 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கிய பதிவுப் புத்தகத்தினை கேள்விக்காரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களைப் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தால் 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆந் திகதி முதல் ஓகஸ்ட் 09 ஆம் திகதி பிற்பகல் 3 00 மணி வரை கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கு நேரே காட்டப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

காரணம் ஏதும் கொடுக்காமல் மிகக் குறைந்த அல்லது வேறு எந்தக் கோரிக்கையோ ஏற்க அல்லது நிராகரிக்க கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| மீன் சந்தைக் கட்டட அமைப்பு வேலை | 500/- | 22000/- |

மேலதிக விவரங்களை பருத்தித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வ. விசயரட்ணம்,
தலைவர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை, 23-07-1999.

(சீ/8294)

---


# கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி! ஹோட்டல் சீவம்ஸ்

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்கு சிறந்த சேவை செய்து வரும் ஒரே ஸ்தாபனம்

**ஹோட்டல் சீவம்ஸ்** இன்றே விஜயம் செய்யுங்கள்.

கொழும்பில் தங்குவதற்கு மிகச்சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டு பேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச்சாலையுடன் அமைந்த ஒரே இடம்! இன்றே விஜயம் செய்யுங்கள்

**HOTEL SEIVAMS [GUEST HOUSE]**

No 29A, SANGAMITHA MAWATHA,
KOTAHENA, COLOMBO - 13
T. P. No. 326522

(67696)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KOBE

GURANTEED PRODUCT

FROM LANKA NIPPON

## ANTENNA BOOSTER NO:1 SELLER IN SRI LANKA

ASK YOUR NEIGHBOUR FOR 'KOBE' PERFORMANCE

**LANKA NIPPON**

18, KEYSER STREET, COLOMBO-11

Tel: 324726, 437735 FAX: 437736

(சி/8283)


இடம்பெயர்ந்து வசிப்போருக்கு

# தற்காலிக வதிவிடம் அமைக்க 7ஆயிரம் கூரைத் தகரங்கள்

வலி. கிழக்கு, ஜூலை 25

வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து தற்காலிகமாக நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் வசித்து வரும் குடும்பங்களுக்கு தற்காலிக வதிவிடம் அமைப்பதற்கு 7 ஆயிரம் கூரைத் தகரங்கள் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் வழங்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், கோப்பாய் பிரதேச செயலகங்களுக்கு தலா 2ஆயிரம் தகரங்கள் வீதம் வழங்கப்பட உள்ளன.

இக்கூரைத் தகரங்கள் யாவும் தற்காலிக வதிவிடத்தின்சுவர்ப்பகுதிகளைச் சுற்றி அடைப்பதற்காகவே வழங்கப்படுகின்றன.

இவ் வதிவிடங்களுக்கான கூரைச்சீற்றுக்களை ஒரு வீட்டுக்கு 10 ஆயிரம் ரூபா செலவில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் வழங்கவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்காலிக வதிவிடம்தேவையானோரின் சகல விவரங்களையும் கிராம சேவையாளர்கள் திரட்டி வருகின்றனர். [ஐ-180]

## தராசுகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஜூலை 25

சாவகச்சேரி உப பிரதேச சபை கைதடி அலுவலகத்திற்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களிலும் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணியை மேற்கொள்ளவுள்ளது.

நாளை திங்கட்கிழமையும் மறு நாள் செவ்வாய்க்கிழமையும் காலை9மணி தொடக்கம் பிற். பகல் 1. 30 மணி வரை கைதடி பணிமனையில் முத்திரையிடும் பணி நடைபெறும். (ஐ-5-180-17)


## உருவச்சிலை விற்பனைக்கு

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்

**அமரர் தந்தை செல்வா**

அவர்களின்

6 அடி உருவச்சிலை விற்பனைக்குண்டு.

தொடர்பு:

**வசந்தன் கடை**

ஆடியபாதம் வீதி,

( அம்மன் கோவில் அருகில் )

திருநெல்வேலி. ( 67670 )



க்ராக், இது பாதங்களில் ஏற்படும் வெடிப்புக்களில் இருந்து 14 நாட்களில் நிவாரணம் அளிக்கிறது.




குதிகால் வெடிப்புக்களுக்கு விரைவாக நிவாரணம் அளிக்கிறது க்ராக் க்ரீம் மட்டுமே.




குதிகால் வெடிப்புக்கு விசேஷமான நிவாரணம்

*யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்*

ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்பபாணம்.

மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல பொருள் வணிக நிலையங்கள், அழகு சாதன கடைகள், சில்லறை கடைகள்.

(சி/8052)



## பாலர் ஆசிரியராக பயிற்சி

தகைமை:

க. பொ. த. சாதாரணதரம் அல்லது மேல்

தபாலில் ஆறு மாதங்களில் பயிலலாம்.

பாலர் ஆசிரியர்சங்கம்

கொக்குவில்

(67591)


## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1940 | 1988 |
| 03 | 07 |
| 23 | 24 |

**அமரர் கந்தையா கனகரத்தினம்**

[உதவி முகாமையாளர், மக்கள் வங்கி.]


எண்ணி நிதமழுது ஏங்கிப் பதினொன்று ஆண்டே பறந்ததையா, ஆருயிராம் நின்நினைவு கண்ணில் நிறைந்திடவே காலமிப்போ ஓடுகையில் அன்பின் பிணைப்பாகி அகமெங்கும் நின்னுயிரே, மண்ணில் எமையாற்றும் மந்திரமாய் நாம் தொழுது பண்பில் வளர்கின்றோம் பாசமுடன் நின்பதமே விண்ணில் நிறைந்தெங்கும் விமலன் திருவடியில் நண்ணிப் பெருஞ் சாந்தி நிதமும் பெறுக நிலைத்து.

அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்,

56, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (57679)

## நினைவஞ்சலி

| 16 ஆம் ஆண்டு | | 3 ஆம் ஆண்டு |
|---|---|---|







| அமரர் | அமரர் | அமரர் |
|---|---|---|
| **S. சரவணமுத்து** ( B. A. ) | **S. கலாபரமேஸ்வரன்** ( M. A. ) | **தி. சுப்பிரமணியம்** |
| [இளைப்பாறிய ஆசிரியர்] | [முன்னாள் குடும்ப திட்டமிடல் அதிகாரி] | [இளைப்பாறிய விவாக பிறப்பு, இறப்பு பதிவாளர், புத்தூர்] |
| பிறப்பு: 19 - 04 - 1901 | 02 - 08 - 1944 | 23 - 03 - 1906 |
| இறப்பு: 24 - 07 - 1983 | 24 - 07 - 1983 | 06 - 05 - 1996 |

தங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்

''இலட்சுமி பதி''
பலாலி வீதி, திருநெல்வேலி.

(67671)

குடும்பத்தினர்
புத்தூர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 05 |
| 01 | 08 |
| 1954 | 1998 |

**அமரர் சுந்தரம்பிள்ளை தேவராஜா**

(பிரான்ஸ்)

திதி: 25 – 07 – 1999

''ஓர் ஆண்டென்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் இதயங்களை
விட்டு என்றும் அகலாது''

தேவனின் நினைவைத் தேக்கி அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்.

சர்வேஸ்வரி (மனைவி),
சரண்யா (மகள்),
மற்றும் குடும்பத்தினர்.

32, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (67680)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## எவ்வாறு நம்பலாம்?

ஆளுங்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய செயற்குழு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றிருக்கிறது. ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளும் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பை உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தத்துடனேயே மேற்கொள்வது என்று செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையைக் காலம் தாழ்த்தாது ஒழிக்கவேண்டும் என்று சில மாதங்களாக விடாப்பிடியாக நின்ற சமசமாஜக் கட்சியும் அன்று அடங்கிப் போயிற்று!

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனதா விமுக்திப் பெரமுனையின் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்புக் கோரிக்கையைக் கருத்தில் கொள்வதில்லை என்று, அவற்றுக்குச் சவால் விடும் தோரணையில், இந்த முடிவு அமைந்திருக்கிறது.

அரசமைப்புச் சீர்திருத்தம் என்பது சாதாரணமான, இலகுவான காரியமல்ல. நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பை அதனோடு சேர்த்து இழுப்பது காலத்தை வாங்குவதற்கே ஆகும். நிறைவேற்று ஜனாதிபதி முறை வழங்கும் அளவுக்கு அதிகமான அதிகாரத்தை மேலும் பல காலத்துக்கு அனுபவிப்பதற்காகவே இந்தச் ''சேர்த்து இழுக்கும்'' தந்திரம்

தனது நிலையை நியாயப்படுத்த அரசு முயன்றாலும், அதிக காலம் அனுபவிக்கும் அதன் ஆசையை மறைக்க முடியாது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை அரசமைப்புச் சீர்திருத்தத்தோடு சேர்த்து இழுத்தடிப்பதால் நாட்டுக்குப் பெருங்கேடு — அழிவு — வந்து விடும் என்று சொல்லமுடியாது. ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதனையும் அரசமைப்புச் சீர்திருத்தத்தோடு சேர்த்து இழுப்பது பெரும் ஆபத்தைக் கொண்டுவரும் என்பதனை அரசாங்கம் உணராது இருப்பதுதான் கவலைக்குரியதாகும்.

மேலும் அரசாங்கத்தின் உத்தேச தீர்வுப் பொதி தமிழ் மக்களின் ஆகக்குறைந்த அரசியல் அபிலாசையான தன்னாட்சி அதிகாரத்தையாவது பூர்த்தி செய்கிறதா என்பதனைத் தெரிந்து கொள்ளும் அல்லது படித்து அறிந்து கொள்ளும் வாய்ப்பு தமிழ் மக்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

அவ்வாறிருக்க, தனது தீர்வுப் பொதி தமிழர்களின் உரிமைகளை வழங்கும் திட்டமே என்று அரசு கூறுகின்றது. அதனையேனும் தனியாகக்கொண்டு வந்து நிறைவேற்ற முயற்சிக்காமல் அரசமைப்புச் சீர்திருத்தத்தோடு சேர்த்துக் குழைத்து வைத்திருக்கிறது. அவ்வாறு குழைத்து வைத்திருப்பதனையே இனப்பிரச்சினைக்கான தீர்வு என உச்சரித்துக் கொண்டு, சமாதானத்துக்கான போரையும் நடத்துகிறது.

போரின் மூலம் சமாதானத்தைக் காணமுடியாது என்ற நியாயமான கருத்தை ஏற்காது போரைத் தீவிரப்படுத்தி தமிழர்களை அவலப்படவும் அவதிப்படவும் வைக்கிறது. அவ்வாறு அவர்களைத் துன்புறுத்துவதன் மூலம் தனது தீர்வுப் பொதியைத் தமிழர்கள் கண்ணை மூடிக்கொண்டு ஏற்பார்கள் என்று அரச மூளை கணக்குப் போட்டதோ என்னவோ! இத்தகைய நடத்தைகளின் பின்னர் அரசு இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் நியாயமாக நடந்து கொள்ளும் என்று எவ்வாறு நம்புவது?

# மொரோக்கோ நாட்டு மன்னர் காலமானார்

## ஆட்சிப் பொறுப்பை ஏற்றார் புதல்வர்

ராபட், ஜூலை 25

வட ஆபிரிக்க நாடான மொரோக்கோவின் மன்னர் ஹசன் (வயது 90) நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமானார்.

அவரது மறைவுக்கு உலகத் தலைவர்கள் அஞ்சலி தெரிவித்து வருகின்றனர்.

மன்னரின் திடீர் மறைவை அடுத்து அவரது புதல்வரான சித்திக் முஹமட் நாட்டின் மன்னராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

கடும் மார்பு வலி ஏற்பட்டதையோடு மன்னர் தலைநகர் ராபட்டில் உள்ள மருத்துவமனை ஒன்றில் அவசரமாகச் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்ததாக மன்னர் அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்தன,

மத்திய கிழக்கில் மதிப்புமிக்க ஒரு தலைவராகக் கருதப்பட்ட மன்னர் ஹசன் ஆட்சிக் காலத்தில் இரண்டு தடவை திடீர்ப் புரட்சிகளின்போது உயிர் தப்பியுள்ளார்.

1971, 1972 ஆம் ஆண்டுகளில் அவரது ஆட்சியைக் கவிழ்க்க இராணுவப் புரட்சியாளர்கள் முயன்றனர். அந்தப் புரட்சிகள் நசுக்கப்பட்டன.

1991 ஆம் ஆண்டு உலக சமாதான மாநாட்டைக் கூட்டுவதில் மன்னர் ஹசன் முக்கிய பங்காற்றினார்.

மன்னரின் இறுதிச் சடங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை தொழுகைக்குப் பின்னர் நடைபெறும் எனத் தெரிகிறது.

மன்னரின் மறைவுக்குப் பல நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். அமெரிக்க அதிபர் கிளின்ரனும் அவரது பாரியாரும் மன்னரின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## அத்வானி கோரிக்கை

ஜம்மு, ஜூலை 25

காஷ்மீரில் உள்ள அப்பாவி மக்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி தெரிவித்துள்ளார். (ஐ)

## தமிழ் நாட்டில் அ.தி.மு.க வெற்றி பெறுவது நிச்சயம்

### ஜெயலலிதா நம்பிக்கை தெரிவிப்பு

சென்னை, ஜூலை 25

தமிழ் நாட்டில் அ.தி.மு.க தலைமையிலான அணி தேர்தலில் பெரும்பாலான தொகுதிகளில் வெற்றிபெறும் ஆனால் அகில இந்திய நிலை பற்றி எதுவும் கூறமுடியாது என அ.தி.மு.க. செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர் மத்தியில் பேசும் போது அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

உலக அரங்கில்

த. மா. கா. தலைமையில் மாற்று அணி உருவாகியிருப்பது தி. மு. க. அணிக்குத்தான் பாதகமாக இருக்குமே தவிர அ. தி. மு. க. அணிக்கு பாதிப்பு ஏதும் இருக்காது என்றும் ஜெயலலிதா தெரிவித்தார்.

நீங்கள் உங்களுடைய போக்கை மாற்றிக் கொள்ளவே இல்லை என்று ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றி செய்தியாளர் கேட்டதற்கு—

அதுபற்றிக் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை எனவும் தொலைந்து போனது அப்படியே இருக்கட்டும் எனவும் ஜெயலலிதா பதிலளித்தார்.

பிரதமர் பதவிக்கு சோனியா காந்தியை முன்நிறுத்தி தேர்தல் பிரசாரம் செய்யப்படுமா எனக் கேட்கப்பட்ட போது—

மக்கள் நலனில் அக்கறை காட்டும்— தேசிய பாதுகாப்பை வலிமைப்படுத்தும்— சிறுபான்மை மற்றும் நலிந்த பிரிவு மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும்— மதசார்பற்ற அரசு மத்தியில் அமைய வேண்டும் என்பதே அ.தி.மு.க.வின் விருப்பம் — என்றார் ஜெயலலிதா, [ஐ—க]

## நேட்டோ ரஷ்யா உறவு புதுப்பிப்பு

பிறசெல்ஸ் ஜூலை 25

ரஷ்யாவும் நேட்டோவும் இராணுவ உறவுகளை மீண்டும் புதுப்பித்துள்ளன.

நேற்று முன்தினம் பிறெசெல்சில் சந்தித்த நேட்டோ அதிகாரிகளும் ரஷ்ய அதிகாரிகளும் முறைபாக தமது உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டனர்.

கொசோவோ மீதான நேட்டோவின் வான் தாக்குதலைத் தொடர்ந்து ரஷ்யாவுக்கும் நேட்டோவுக்கும் இடையிலான இராணுவ உறவுகளில் விரிசல் நிலை ஏற்பட்டது தெரிந்ததே.

இவர்களது சந்திப்பின் போது கொசோவோவில் நேட்டோவின் தலைமையிலான அமைதிப் படையின் நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ஐ-க)

## ஜப்பானில் திகில் நாடகம்

# விமானத்தைக் கடத்த முயன்றவரின் தாக்குதலில் விமானி உயிரிழப்பு!

ரோக்கியோ, ஜூலை 25

ஜப்பானில் விமானம் ஒன்றைக் கடத்த முயன்றவருக்கும் விமானிக்கும் இடையே நடந்த கைகலப்பில் விமானி உயிரிழந்தார். விமானத்தைக் கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டது.

உள்ளூர் விமான சேவையில் ஈடுபட்டிருந்த 'போயிங் 747' ரக விமானம் ஒன்றையே நபர் ஒருவர் கத்தியைக் காட்டிக் கடத்த முயன்றார்.

500 பயணிகளுடன் ரோக்கியோ விமான நிலையத்துக்கு அண்மையில் அந்த விமானம் பறந்து கொண்டிருந்த போது விமானியின் அறைக்குள் நுழைந்த நபர் ஒருவர் கத்தியைக் காட்டி அமெரிக்க இராணுவத் தளம் ஒன்றுக்கு விமானத்தைச் செலுத்துமாறு மிரட்டினார் விமானி அதற்கு மறுக்கவே அந்த நபர் தாக்கத் தொடங்கினார். கத்திக் குத்துக் காயங்களுடன் ஒருவாறு சாதுரியமாக விமானத்தை ரோக்கியோ விமான நிலையத்தில் விமானம் தரையிறக்கியபோதும் கடும் காயங்கள் காரணமாக அவர் பின்னர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடத்தல் நபரை படையினர் கைது செய்தனர்.

ஜப்பானில் இதுவரை 18 விமானக் கடத்தல் முயற்சிகள் இடம்பெற்றுள்ளன ஆனால் விமானி ஒருவர் உயிரிழந்தது இதுவே முதல்முறை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

## எக்கட்சிக்கும் ஆதரவில்லை ரஜனிகாந்த் அறிவிப்பு

சென்னை, ஜூலை 25

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என்று தமிழக திரைப்பட நடிகர் ரஜனிகாந்த் அறிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

''தமிழகத்தில் தி.மு.க. — த.மா.கா கூட்டணி ஏற்படுவதற்கு நானும் ஒரு காரணகர்த்தாவாக இருந்துள்ளேன். ஆனால் தற்போது அந்தக் கூட்டணி முறிவடைந்துவிட்டது. இந்த நிலையில் தி.மு.கவுக்கோ அல்லது த. மா. காவுக்கோ நான் ஆதரவு வழங்கவில்லை'' என்றும் ரஜனிகாந்த் கூறினார்.

எதிர்வரும் தேர்தலில் தனது பெயரையோ, படத்தையோ பயன்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொண்ட ரஜனிகாந்த் அவ்வாறு பயன்படுத்துவோர் பின்னர் வருத்தப்பட வேண்டி வரும் என்றும் கூறினார்.

அதேநேரம் — தமிழக முதல்வர் மு. கருணாநிதியும் த.மா.கா தலைவர் ஜி.கே. மூப்பனாரும் தனது தனிப்பட்ட நண்பர்கள் என்றும் அவர்களுடன் தனது நட்பு தொடரும் என்றும் ரஜனிகாந்த் தெரிவித்தார். (இ-6)

### நாளை

ஆடி 10

திங்கட்கிழமை

திதி: திரயோதசி

பிற்பகல் 3 .17 வரை.

நட்சத்திரம்: மூலம்

நண்பகல் 12. 19 வரை.

சுபநேரம்: 12.02 1.32

ராகுகாலம். 7 32 9.02

(பகலுக்குரிய இ[illegible] பழைய நேர[illegible])

### உதயவாக்கு

பண்புகளுடன் கூடிய சிறந்த செயல்களை மறவாமல் செய்வாயாக.

ஔவையார்

## குழந்தைகள் வளர்வதற்குப் பாதகமான நாடு அங்கோலா

அங்கோலா, ஜூலை 25

உலகிலேயே குழந்தை ஒன்று வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லாத—மோசமானநாடாக —அங்கோலா இனங்காணப்பட்டுள்ளது.

ஐ. நாவின் குழந்தைகள் பிரிவு (யுனிசெவ்) மேற்கொண்ட ஆய்விலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பு வீதம், போசாக்கு இன்மையால் வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வருகை வீதம், ஆயுதப் பிணக்குகளால் அபாயம், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்படும் குழந்தைகளின் வீதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அங்கோலாவை அடுத்து குழந்தைகள் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லாத நாடுகளாக சியராலியோன், ஆப்கானிஸ்தான் மற்றும் சோமாலியா ஆகியன முன்னணி வகிக்கின்றன எனவும் அந்த ஆய்வு மேலும் தெரிவிக்கின்றது.

அங்கோலாவில் தொடரும் உள்நாட்டுப் போர், சுகாதார சேவை முற்றிலும் செயலிழந்து இருத்தல், அடிப்படைக் கல்வி அற்ற நிலை நாடளாவிய ரீதியில் உணவுக்குத் தட்டுப்பாடு ஆகியன காரணமாக உலகிலேயே குழந்தைகள் வளர்வதற்கு மிக மோசமான நாடாக அது உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மில்க்வைற்' கனகராசாவின் வணிகம் மக்கள் சேவையுடன் இணைந்தது

## அதனால் புதிய பரிமாணம் பெற்றது



யாழ்ப்பாணக் குடா நாட்டின் சமூக, பொருளாதார, சமய வளர்ச்சிகளில் உள்ளார்ந்தமான அக்கறையுடன் சேவையாற்றியவர் பெருவள்ளல் பெரியார் கலாநிதி கனகராசா. மக்கள் நலனுக்காகவும் மண்ணின் வளத்துக்காகவும் குறிப்பாக சூழல் பாதுகாப்புக்காகவும் மிகுந்த தீர்க்கதரிசனத்துடன் அயராது உழைத்த அவர், பன்முகப்பட்ட நிபுணராகவும் சேவையாளராகவும் வள்ளலாகவும் விளங்கினார், ''மில்க்வைற்'' கனகராசாவை யாழ்ப்பாணம் மறக்க முடியாத அளவுக்கு அவரது சேவை ஆழ வேரூன்றியும் நெடிது உயர்ந்தும் நிற்கிறது.

அவர் அமரத்துவம் அடைந்த முதலாவது ஆண்டுப் பூர்த்தி இம் மாதம் 22 ஆம் திகதியாகும். அவரது நினைவாக இக் கட்டுரையைப் பிரசுரிக்கிறோம்.

—ஆசிரியர்

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

'மில்க்வைற்' கனகராசா என்று எல்லோரும் நினைவு கூரும் சிவதர்ம வள்ளல் கலாநிதி கனகராசா காலத்துடன் இணைந்து ஓர் ஆண்டு கடந்து விட்டது. இடப் பெயர்வு அவருடைய உடலையும் உள்ளத்தையும் மெலிவடையச் செய்து விட்டது. ஆனால் அவருடைய ஆன்மா தளர்வடையவில்லை. சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் ஒரு பணிப்பாளராக இருந்த அவர் கூட்ட அறிவித்தல் கிடைத்தவுடன் கூட்டத்துக்கு வரமுடியாமை பற்றி உடனடியாக அறிவிப்பார்.

கலாநிதி கனகராசாவை 'வள்ளல்' என்று நான் குறிப்பிடுவதற்குக் காரணம் அவர் பொருள் அள்ளிக் கொடுத்தார் என்பதற்காகவல்ல. அவருடைய வள்ளல் தன்மை அவர் மரங்களைப் பேணியமையேயாகும். பனம் விதை தொடக்கம் பழமரக் கன்றுகள் வரை தன்னுடைய 'மில்க்வைற்' வாகனத்திலேற்றிக் குடாநாட்டின் எல்லா இடங்களுக்கும் வன்னிப் பிரதேசத்துக்கும் கொண்டு சென்று வழங்கி வருவார். அவருடைய அந்த வள்ளல் தன்மையை உலகமே வியந்தது. அவருக்கு வழங்கப்பட்ட கௌரவ கலாநிதிப் பட்டம் இத்தகைய சேவைக்காகவே சூட்டப்பட்டது.

சூழல் மாசடைதல், புவி வெப்பமடைதல் போன்ற பல சூழற்பிரச்சினைகள் மரங்களைப் பேணுவதாலேயே ஓரளவு தீர்க்கமுடியுமென சூழல் விற்பன்னர்கள் கூறுகின்றனர். கலாநிதி கனகராசா இத் தொலைநோக்குடனேயே தன்னுடைய பணியினைச் செய்தார். வெளிநாட்டார் பலர் இவருடைய மரம்பேணும் பணியினை இங்கு வந்து நேரடியாகப் பார்வையிட்டுச் சென்றனர்.

கூட்டங்கள் பலவற்றிலே அவர் பங்கு பற்றி வந்துள்ளார். ஆனால் எந்தக் கூட்டத்திலாவது அவர் அதிகம் பேசி மற்றவர்களைக் களைப்படையச் செய்ததில்லை. மிகச்சுருக்கமாகத் தான் சொல்ல வேண்டிய கருத்தினைச் சொல்லி அமர்ந்து விடுவார். அவர் ஒரு செயல் வீரர் அதனால் பேசுவதிலே அவர் அதிகம் காலத்தைச் செலவழிப்பதில்லை.

வணிகத்தினையும் சமூக சேவையினையும் எப்படி இணைக்கலாம் என்பதைக் கலாநிதி கனகராசாவின் செயற்பாடுகளிலேயிருந்து நன்கு தெரிந்து கொள்ளலாம். அவருடைய தொழிற்சாலையிலிருந்து சவர்க்காரம் கொண்டு செல்லும் வாகனத்திலேதான் நடுதற்கு மரங்களும் விதைகளும் கொண்டு செல்லப்பட்டன. அவற்றுடன் பண்பாட்டுச் செய்திகள் கொண்ட எழுத்துப் பிரசுரங்களும் கொண்டு செல்லப்பட்டன.

வருமானம் இல்லாத வணிகம் செய்வதிலே எவ்வித பயனுமில்லை. ஆனால் அவ் வருமானம் மக்கள் சேவையுடன் இணைந்து வரும் பொழுது அது புதிய பரிமாணம் பெறுகின்றது. கலாநிதி கனகராஜாவின் வணிகம் இப்படித்தான் அமைந்தது.

### அவரின் சிறப்பு

சமூக, பண்பாட்டு நிகழ்ச்சிகளிலெல்லாம் பங்கு பற்றுகின்ற வழக்கமுடையவர் அவர். எங்கு சென்றாலும் கூடவே சில அறிவு புகட்டும் பிரசுரங்களை எடுத்துச் செல்வார். 'மில்க் வைற் செய்தி' பல நல்ல செய்திகளைத் தாங்கி வரும் ஏடாக அமைந்தது. இலவசமாக இவ்விதழை அவர் மக்களுக்கு வழங்கி வந்தார். இது பெரிய கொடையாகும். அவரை வள்ளல் என்று சொல்வதற்கு இதுவும் ஒரு சிறப்பான காரணமாகும்.

சைவவித்தியா விருத்திச் சங்கத் தலைவர் என்ற வகையில் நானும் எங்கள் பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் அவருடைய இழப்பினை எண்ணிப் பெரிதும் வருந்துகிறோம். பணிப்பாளர் சபையில் அவர் ஓர் உறுப்பினராக இருந்த பொழுது கூட்டங்களுக்குத் தவறாமல் வந்து தன்னுடைய பட்டறிவு வாய்ந்த ஆலோசனைகளைக் கூறுவார். வருகின்ற பொழுதெல்லாம் எங்கள் இல்லப் பிள்ளைகளுக்கு ஏதாவது கொண்டு வருவார் ஆரவாரமில்லாத எளிமையான கொடையாளனாக அவர் விளங்கினார்.

அவர் இவ்வுலகில் வாழும் போதே சிவதர்ம வள்ளலாக வாழ்ந்து விட்டார். எனவே அவ்வுலகில் அவருக்குச் சிவபதம் நிச்சயமாகி விட்டது. பலர் காலமாகி விடுவார்கள். ஆனால் இவரைப் போன்ற சிலரை காலம் நினைவிலே வைத்திருக்கும்.

★

# இன்றையதேவையை பூர்த்திசெய்யும் 'கூடிவிளையாடுபாப்பா' சிறார் நாடகம்

**திருமதி சந்திரிகா தர்மரட்ணம்**

மேற்கு நாடுகளில் சிறுவர் நாடகம் வளர்ச்சியடைந்ததைப் போல இலங்கையில் வளர்ச்சியடையவில்லையாயினும் 1978 ஆம் ஆண்டு குழந்தை ம. சண்முகலிங்கம் எழுதிய நாடக பாடத்தை 1979 ஆம் ஆண்டு ஆ. தார்சீசியஸ் நெறியாள்கை செய்ததனூடாக சிறுவர் நாடக அருட்டலை ஏற்படுத்தியது.

அவரைத் தொடர்ந்து பேராசிரியர், சி. மௌனகுரு, க. சிதம்பரநாதன், பிரான்ஸிஸ் ஜெனம், உருத்திரேஸ்வரன் போன்றவர்களும் புதிய தலைமுறையினராக ஜெயசங்கர், தேவானந்த், ஜோன்சன் ராஜ்குமார், கெனத், ஜெயரஞ்சினி, நந்தகுமார் ஆகியோரும் சிறுவர் நாடக அரங்க வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றி வருகிறார்கள்.




இதுவரை காலமும் புராண இதிகாசக் கதைகளை நாடகமாக ஒப்புவித்து வந்த மாணவர்களுக்கு, 'கூடிவிளையாடு பாப்பா' என்ற நாடகம் திருப்பு முனையாக அமைந்து விட்டது.

1979 ஆம் ஆண்டு அப்போதைய யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கூடிவிளையாடு பாப்பா மேடையேறியபோது பார்த்து ரசித்த பல்லாயிரக் கணக்கான சிறுவர்களுள் நானும் ஒருத்தி. அப்போது எனக்கு வயது பன்னிரண்டு. அன்று நவீன ஒளியமைப்புக்களுடன் மேடையேற்றப்பட்டது, அன்றைய ''கூடிவிளையாடு பாப்பா'' இன்றும் என் மனதை விட்டு அகலவில்லை.

இன்றைய 'கூடிவிளையாடு பாப்பா' அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் தயாரிப்பில் உருவானது. இந்த நாடகத்தை இரண்டு தடவைகள் பார்வையிட்டேன். கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையில் மேடையேறிய போது ஏற்படுத்திய வெற்றிஎண்ணிலடங்காதது. பார்வையாளர்களாக இருந்த சிறுவர்கள் அனைவரும் நாடகம் பார்க்கிறோம் என்ற நிலையை மறந்து அவர்களும் நடிகர்களாயினர். பார்வையாளர் பங்காளர் ஒன்றிணைப்பே நாடகத்தின் பிரதான மூலகமாகும். பார்வையாளரை ஒன்ற வைத்த திறமை நடிகர்களின் நடிப்புத் திறனில் அடங்கியுள்ளமை என்பது இந் நாடகத்தின் வெளிப்பாடாகும்.

''யாழ். குடா நாட்டில் பல பாகங்களிலும் மேடையேறிய ''கூடி விளையாடு பாப்பா'' என்ற நாடகம் 29-06-99 ஆம் திகதியன்று இருபத்தொன்பதாவது தடவையாக யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் மேடையேறியது.

இந் நாடகம் முடிவுற்றதும் நிகழ்ந்த ஒன்று கூடலின்போது, ''தே. தேவானந்தனின் நெறியாள்கையில் உருவான கூடிவிளையாடு பாப்பா இன்றைய காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும், சர்வதேசத் தரம் வாய்ந்ததெனவும், சிறுவர் நாடக விழுமியமாகவும் உள்ளது'' என்று பேராசிரியர் நந்தி கூறினார்.

இந் நாடக ஆரம்பத்தில் நெறியாளர், பார்வையாளர்களை ஒன்றவைத்த விதம் சிறப்பாக இருந்தது இவர் உரைஞராகவும் நடிகராகவும் தொழிற்பட்டார். பாத்திரங்கள் பார்வையாளர் மத்தியிலிருந்தே அரங்கினுள் நுழைந்தன. கரடி, நாய், பூனை, சேவல், ஆடு, பன்றி, நரி, குரங்கு போன்ற மிருகங்களுடன் ஒரு மனிதனும் கதாபாத்திரமாகத் தோன்றினான். அடிக்கடி பார்வையாளர்களுடன் பாத்திரங்கள் உரையாடின. பார்வையாளர்களின் அபிப்பிராயங்களைப் பெற்றே தொடர்ந்தும் நடித்தார்கள். சிறுவர்களும் பல கட்டங்களில் பாடல்களைப் பாடி இணைந்து நடித்தனர்.

''சுக்குப்பக்கு சுப்பற்ற கொல்லை, றப்பர் தோட்டம்..., என்றகமலாவின் பாடலுடன் சிறுவர்களும் ஒன்று [illegible] ஆடிப்பாடி நடிக்கத் தொடங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பாடகர்களாக வந்த ஐந்துபெண்களும் சிறப்பாகப் பாடியது மட்டுமன்றி தேவையான இடங்களில் தாமும் பாத்திரமாக நடித்தார்கள்.

கமக்காரன் மண்வெட்டி கொண்டு மண் வெட்டிய விதமும் மரவள்ளி மரத்தைப் பிடுங்கிய விதமும் மிகச் சிறப்பாக இருந்தன. ''தனிச்சு நிண்டு ஒரு காரியமும் செய்யேலாது எண்டு இந்த மனிதனுக்குத் தெரியாது'' என்று குரங்கார் கூறுவதனூடாக சிறுவர்களுக்கு ஒற்றுமையே பலம் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்கள். ஒவ்வொரு பாத்திரத்தின் நடிப்பும்

(11ஆம் பக்கம் பார்க்க)






# அமெரிக்காவிலும் உண்டு சிறுவர் சட்டவிரோத வேலை!

'இன்டர்நஷனல் ஹெரால்ட் டிரிபியூன்' என்ற பத்திரிகையில் வெளிவந்த செய்திக் குறிப்பொன்று பின்வருமாறு கூறுகிறது.

''சிறுவர் ஊழியம் அமெரிக்க வாழ்க்கையிலிருந்து பெருமளவுக்கு மறைந்து சென்றிருந்தது. ஆனால் கடந்த தசாப்த காலத்தில் அது மீண்டும் எழுச்சி கண்டு, பல்கிப் பெருகி வந்துள்ளதைக் காணமுடிகிறது. சமஷ்டி அரசின் புள்ளி விவரத் தரவுகளின் பிரகாரம், 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சுமார் 40 இலட்சம் சிறு பிள்ளைகள் இப்பொழுது சட்டபூர்வமாகத் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். அதேவேளையில், சுமார் 20 இலட்சம் சிறுவர்கள் சட்டவிரோதமாக வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.''

இதுவரை காலமும் சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்துவது என்பது மூன்றாவது மண்டல நாடுகளுக்கு மட்டுமே சொந்தமான பிரச்சினையொன்றாகக் கருதப்பட்டு வந்துள்ளது. வளர்ச்சி கண்ட முதலாவது உலகம் இந்த விஷயம் குறித்து அவ்வளவாக அலட்டிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கவில்லை. ஆனால், இன்று அமெரிக்கா போன்ற ஒரு வல்லமை மிக்க நாட்டில் சிறு பிள்ளைகளை வேலைகளில் அமர்த்தி, அவர்களைச் சுரண்டும் நடைமுறை வியாபித்து வருவதானது, முதலாளித்துவ உலகின் கட்டமைப்பு ரீதியான நெருக்கடியின் வெளிப்பாடுகளை மிகவும் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

அமெரிக்காவின் கனவு சிதைந்து வருவதனையும், முதலாவது உலகின் சில பாகங்கள் மூன்றாவது உலகமயமாகி வருவதனையும் இன்று நாம் காண்கின்றோம். உலகின் தன்னிகரில்லாத தனியொரு வல்லரசாகக் கருதப்பட்ட நாட்டிலும் கூட இந்த அவலம் தோன்றியுள்ளது. பெருமளவுக்குத் தம் பட்டமடிக்கப்பட்ட புதிய தாராளவாதத்தின் வெற்றி இறுதியில் ஒரு போலி வெற்றியாக இருக்கமுடியும் என்ற சமிக்ஞையையும் இது காட்டுகிறது.

(நன்றி: பொருளியல் நோக்கு- ஜூலை 1992)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் ஒரு வாரத்தில் உலகம் அழிந்து விடுமா?

0999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி நடுநிசியில் உலக முடிவு என்று மக்கள் நம்பினார்கள். இக்கருத்து பெரும்பாலும் கிறிஸ்தவ நாடுகளிலேயே வேரூன்றியிருந்தது. பற்பல நாடுகளின் நம்பிக்கைக்கு ஒப்ப வெவ்வேறு கருத்துக்கள் நிலவின.

ஜேர்மனி, செக்கோசிலோவேகியா போன்ற நாடுகளில், — உலகம் அனற்பிழம்பாக மாறி யாவும் தீய்ந்துவிடும் என்ற நம்பிக்கை. மத்தியதரைக்கடல் நாடுகளிலோ இறைதூதன் கபிரியலின் எக்காளத்தொனி செத்துக்கிடப்போர் யாவரையும் அவர்களது

## 1000ஆண்டுகளுக்குமுன்னரும் இப்படி ஓர்ஊகம்வந்துபோனது

குழிகளிலிருந்து அழைத்து கடவுளின் இறுதித் தீர்ப்பை வழங்க ஏற்பாடுகள் நிகழும் என்ற நம்பிக்கை. அப்போது இறைவனின் புதல்வர் இயேசுநாதர் மீண்டும் பூமிக்கு வந்து உண்மையான விசுவாசிகளை சுவர்க்கத்திற்கு இட்டுச் செல்வார் என்பதும் ஓர் உறுதியான நம்பிக்கை

0999 ஆம் ஆண்டு டிசெம்பர் அணுகத் தொடங்கியவுடனேயே ஐரோப்பாவே மன

நின்றது. சகோதரத்துவம், மனிதநேயம். அன்பு பாசம் என்பன பெருகத் தொடங்கியது. பரஸ்பர உதவி, பண்பாடான நடத்தை, உள்ளங்களின் கருணை வெள்ளப் பெருக்கு இவை யாவும் ''ரகங்களில் அவள் மார்கழி'' என்பதைக் காட்டிற்று.

மறியல் வீடுகள் திறக்கப்பட்டன. ''குற்றவாளி'' என்ற இனம் ஒழிந்துவிட்டது. பணக்காரன் ஏழை என்ற வித்தியாசம் உடையிலோ உடைமையிலோ மறைந்தொழிந்தது.

### "திகதி"

வள்ளல்கள் தோன்றினர். யாவரது வாழ்வும் மலர்ந்தது. காதலுக்கு முட்டுக்கட்டை போட்ட பெற்றோர்கள் கன்னத்திலடித்துக் கொண்டனர். இரவும் பகலும் கோயில்களில் பூசைகள் பக்திப்பாடல்கள் யாவும் ஒலித்தன. வகுப்பு வேற்றுமைகள் மறக்கப்பட்டன.

0999 டிசெம்பர் 31இல் ரோமாபுரியில் புனித பீற்றரின் கோயில் நிரம்பி வழிந்தது. யாவரும் முழங்காலில் நின்று பணிந்தனர். போப்பாண்டவர் இரண்டாவது சில்வெஸ்ரர் அவர்கள் தூபபீடத்தின் முன்னால் அமைதியாக நின்றார். கோவில் முழுவதும் அமைதி.

**சூரியகாந்தி**

**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

வுளைச்சலால் அதிர்ந்தது. யாவரது சிந்தனைகளும் ''அழிவை''ப்பற்றியே சுழன்றன. பெரும்பீதி பீடையாக மாறியது. மக்கள் கடன்கள் அறவிடுதலைத் தவிர்த்தார்கள். கணவன் மனைவியர் தமது இரகசிய உறவுகளைப் பரிமாறிக் கொண்டார்கள். ஒருவரையொருவர் மன்னித்து விட்டனர். தவறு செய்தவர்கள் யாவரும் தவறுகளை ஒப்புக்கொண்டார்கள். மன்னிப்பு அளிக்கவேண்டியவர்கள் யாவரது குற்றங்களையும் மன்னித்தார்கள் பிச்சைக்காரர் என்ற இனமே இல்லாமற் போய்விட்டது. யாவரும் சமம், சாதிபேதம் கிடையாது என்ற தத்துவம் மேலோங்கி

போப்பாண்டவரின் பேலங்கி ஆடும் ஒலியைத் தவிர வேறொரு ஒலியுமில்லை. போப்பாண்டவரின் கைகள் சுவர்க்கத்தை நோக்கி உயர்ந்திருந்தன. யாவருடைய நாடித்துடிப்புக்களும் ஒருங்கே மௌனமாக ஒலித்தன.

நடுநிசி வழிபாடு முடிந்தது. மணிக்கூட்டின் டிக்டிக் ஒலி 12 அடித்து ஓய்ந்தது. இருந்தாற்போல் அதன் மினிற் கையொலி நின்று போயிற்று. பக்தர்களின் இரத்தம் உறைந்தது. இரண்டு நிமிடங்கள் யாவும் அமைதி; எங்கும் அமைதி பின்னர் மணிக்கூட்டின் ஒலி மெதுவாகக் கிளம்பியது. வெற்றிப் புன்முறுவலு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரொலி...

**- இடியன் -**

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்கான பாதை சம்பந்தமாக இன்னமும் இறுதியான முடிவு எடுக்கப்படவில்லை.

★ **வடக்குக்கான பாதை...? முடியாது!; வன்னிக்கான பாதை...? கிடையாது! — என்பதா...?**

காஷ்மீர் பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்தி விட்டதில், கார்கில் போர், இராஜதந்திர ரீதியில் பாகிஸ்தானுக்கு வெற்றியே என்கின்றனர் அரசியல் ஆய்வாளர் சிலர்!

★ **சர்வதேச மயப்படுத்தப்பட்டதா? அல்லது சர்வதேச 'மாயைப்' படுத்தப்பட்டதா?**

அரச படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில், சக படையினரே கொல்லப்பட்டனர்; இந்தியாவில் கார்கிலிலும் யாழ்ப்பாணத்தில் அரியாலையிலும் இப்படி நடந்துள்ளது

★ **பயந்துநடுங்கும் படையினரின் கண்களுக்கு, பார்க்குமிடமெல்லாம் பயங்கரவாதிகள் தான்!**

பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள ஜப்பான் நாட்டில் சென்ற ஆண்டில் மட்டும் 30.000 பேர் தற்கொலை செய்து கொண்டனர்!

★ **சிலர் பணத்தை உயிராகக் கருதி அதைப் பாதுகாப்பார்கள்; சிலர் உயிரைப் பணமாக நினைத்து, அதைச் செலவிடுகின்றார்கள்.**

புலம் பெயர்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த நிவாரணம் வெட்டப்பட்டதால், ஆயிரக்கணக்கானோர் பெரும்பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

★ **'வெட்டொன்று. துண்டு இரண்டு' என்பதை அரசு ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது; வேறு அர்த்தங்களும் அதற்கு உண்டு!**

புல்வெட்டும் வேலையில் பொதுமக்களை ஈடுபடுத்த வேண்டாம் எனச் சம்பந்தப்பட்டவர்களுக்குப் படையதிகாரிகள் அறிவித்துள்ளார்களாம்!

★ **பொது மக்களைக் கொண்டு புல்லை வெட்டுவித்துவிட்டு, யாராவது பெரு மக்களின் பேரில் ''பில்''லை முடிப்பதைத் தடை செய்வதுதான் நோக்கமோ?**

வவுனியாவில் சீருடையில் வந்த சிலர், பஸ்ஸொன்றுக்குத் தீ வைத்து அழித்தனர்.

★ **சீருடையினர் சீரை உடைத்தனர்!**

யாழ்ப்பாணத்திலே சில்லறைக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுவதால், கொடுக்கல், வாங்கலில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.

★ **சில்லறை இல்லாததால், பலர் நாணயமற்று நடக்கின்றார்களோ?**

வெளிநாட்டுக் கடிதங்கள் உடைக்கப்பட்டு வருவதால், அவற்றை விநியோகம் செய்யும்போது பல சிக்கல்கள் உருவாகின்றனவாம்!

★ **கடிதங்களைக் கொடுக்கும் போது, ''கடி'' தங்களைத் தாக்குவதாக, விநியோகிப்போர் உணர்கிறார்களோ?**

# இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மன்னாரில் மக்கள் வாழ்வைச் சூழும் பயங்கரங்கள்!

**வவுனியா வலம்**

**-ரா.இளவரசன்-**

மன்னாரின் பெரும்பகுதி கடலும் கடல் சார்ந்த இடமுமான நெய்தல் நிலமாகும். இது மன்னார்த்தீவு — மன்னார் பெரு நிலப்பரப்பு என இரு பகுதிகளாக இருக்கிறது. இதில் மன்னார்த் தீவு முற்று முழுதாக இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள பகுதி. மன்னார்ப் பெரு நிலப்பரப்பு கொஞ்சங் கொஞ்சமாக இராணுவத்தின் கையில் வந்து கொண்டிருக்கிறது. இதில் எஞ்சியிருக்கும் கொஞ்சப் பகுதியைப் பிடிக்கத்தான் ரணகோஷ 4 நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அது தற்போது பாதியில் நிற்கிறது.

ஆனால் அதுவல்ல தற்போதைய பிரச்சினை. மக்கள் செறிந்து வாழும் — ஏறத்தாழ முற்றுமுழுதாகவே மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் மன்னார்த் தீவின்மக்கள் தற்போது அடுத்தடுத்து எதிர் கொண்டிருக்கும் இராணுவ அடாவடித்தனங்கள் தான் தற்போது அலசப்பட வேண்டிய பிரச்சினை — கற்பழிப்புகள், கொலைகள், வீடெரிப்புகள், அப்பாவிகள் மீதான தாக்குதல்கள் என்பவற்றால் அந்தப் பகுதி வாழ் மக்கள் தவித்துப் போயிருக்கிறார்கள்.

எதனையும் தட்டிக் கேட்கும் — எவரையும் தப்பிப் போக விடாத — ஒரு நீதிவான் அங்கே பதவியிலிருப்பது ஆறுதலான விடயமாக இருந்த போதிலும், அவரது கிடுக்கிப்பிடிக்கு மத்தியிலும் மன்னாரில் அடுத்தடுத்து நடக்கும் சம்பவங்கள் அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்திருகின்றன.

மன்னாரைப் பொறுத்தவரை புலிகளின் ஊடுருவல் உள்ளது என்பதை விட அவர்கள் ஊடுருவி இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. சில மாதங்களுக்கு முன் மன்னார் செயலகத்துக்குச் சொந்தமான 'பிக் அப்' வாகனத்தை மன்னார் நகர்ப் புறத்தில் வைத்துக் கடத்தி கடற்கரையில் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே வத்தைகள் மூலம் வன்னிக்குக் கொண்டு சென்றமை, நகரப் பகுதியில் அடிக்கடி நடக்கும் தாக்குதல்கள், என்பன புலிகள் அங்கிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

இதே வேளை பெருமளவான வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்கள் போன்றன மன்னார் ஊடாகத்தான் புலிகளுக்குப்போய்ச் சேர்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. அதனை ஊர்ஜிதம் செய்வது போல் பொதுமக்களும் ஏன் படையினரும் மன்னாரூடாகப் புலிகளுக்குப் பொருள்களை அனுப்பியது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறான புலிகளின் ஊடுருவல்களால் வெறுத்துப் போன படையினர் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் செய்யும் அட்டூழியங்களும் அதிகரித்துள்ளன. இவை அண்மைக் காலங்களில் அடுத்தடுத்தும் நடந்துள்ளன.

மன்னாரில் புலிகள் என்ற பெயரில் பலரைச் சுட்டுக் கொல்வதும், புலிகள் தாக்கிய போது திருப்பி அப்பாவிகளைத் தாக்குவதும் அடிக்கடி நடந்து வரும் சம்பவங்கள்தான். ஆயினும் அண்மையில் நடந்த சில சம்பவங்கள் அகோரமானவை; அநியாயமானவை.

இரண்டு வருடங்களுக்கு முன் இளைஞர் ஒருவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு அங்குள்ள ஒரு பொது இடத்தில் வைத்து பொதுமக்கள் முன்னிலையில் வைத்து, புலிகளுக்கு உதவுபவர்களின் நிலை இப்படித்தான் ஆகும் எனக்கூறி கடுமையாகத் தாக்கப்பட்டார். அந்த இளைஞர் [illegible] இறந்துபோனது அதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் அந்தச் சம்பவத்தை அண்மையில் மன்னார் நீதிமன்றத்தில் கூறியதை அடுத்து அந்த இராணுவ அதிகாரிக்கு எதிராக தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடப்படவேண்டிய விடயங்கள்.

கடந்த மாதத்தில் மன்னார் வை. எம். சி. ஏக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினர் இருவர் அங்கிருந்த கடையொன்றில் சிகரட் வாங்கப்போனபோது கடைக்குள் இருந்த புலி உறுப்பினர்கள் தம்மைப் பிடிக்கத்தான் படையினர் வருவதாக நினைத்து இராணுவ வீரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் —

இதில் இரு இராணுவ வீரர்களும் காயமடைய, பின்னர் அந்தப் பகுதிக்கு வந்த இராணுவத்தினர்கள் வீதியால் போய் வந்த அனைவரையும் பஸ்ஸிலே வந்தவர்களையும் சகட்டு மேனிக்கு தாக்கி அதில் பலர் பலத்த காயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் சென்றதும் நினைவு கூரவேண்டிய சம்பவமாகும்.

ஆனால் இவைகளெல்லாவற்றையும் விட இந்த மாதத்தில் தொடர்ச்சியாக நடைபெறும் சம்பவங்கள் மன்னார்ப்பகுதியை ஒரு பயங்கரமான பகுதியாக எண்ண வைத்திருக்கிறது.

இந்த மாதத்தின் ஆரம்பத்தில் ஒருநாள் இரவு மன்னார் தாராபுரம் பகுதியிலுள்ள வீடொன்றை சிலர் தட்டுகிறார்கள். அது ஒரு முஸ்லிம் குடும்பத்துக்குச் சொந்தமான வீடு. அந்த வீட்டின் ஒருபகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த ஒரு தமிழ்க் குடும்பம் வாடகைக்கு வசித்து வருகின்றது. கதவு தட்டப்படும் சத்தத்தைக் கேட்டு முஸ்லிம் குடும்பத்தினர் கதவைத் திறக்கிறார்கள். அங்கே ஆயுதம் தாங்கிய சிலர் முகங்களை கறுப்புத் துணியால் கட்டியபடி காணப்படுகின்றனர். அவர்கள் அந்த வீட்டில் தங்கியுள்ள தமிழ் குடும்பத்தவர்களை வெளியே அனுப்பும்படி கூறுகின்றனர். ஆனால் அந்த முஸ்லிம் குடும்பம் நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து அவர்களை வெளியே அனுப்ப மறுக்கின்றது. ஆயுததாரிகளுடன் வாக்குவாதப்படுகின்றனர். திடீரென முஸ்லிம் குடும்பத்தவர் மீது சரமாரியாக வெட்டு விழுகின்றது. 45 வயதான பாஹியா உம்மா என்ற குடும்பத் தலைவி அதே இடத்தில் கொல்லப்படுகிறார். குடும்பத் தலைவரான முஹமட் உசேன் (50 வயது) ஆபத்தான வெட்டுக் காயங்களுடன் கிடக்க அங்கே தங்கியிருந்த தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த சேகரும், அவரது

[8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜூலையின் இருண்ட பகுதியில் வெளிச்சத்தைத் தேடுகின்றார்கள் தமிழ் மக்கள்

திருமலைத் திருமுகம்
— சங்கீத் —

இன்று ஜூலை 25 ஆம் திகதி என்றதும் பழையன நினைவுக்கு வருகின்றன.

ஆம். தமிழர் சமுதாயத்துக்கு எதிராக கடந்த பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் இன்றும் அவர்கள் நெஞ்சங்களில் நீங்காத நினைவாக இடம்பெற்றுள்ளன.

திட்டமிட்ட அடிப்படையில் இடம் பெற்ற அந்த வன்செயல்களின் போது தமிழ் மக்கள் வீதிகளில் வைத்து குண்டாந்தடிகளாலும் இரும்புக்கம்பிகளாலும் அடித்துக் கொல்லப்பட்டனர். தமிழர் தம் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன; கொள்ளையடிக்கப்பட்ட சிறைக் கூடங்களில் எங்கள் இரத்தத்தின் இரத்தங்கள்குற்றுயிரும், குலைஉயிருமாகசித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களின் கண்கள் கூட பிடுங்கப்பட்டு ''தமிழ் ஈழத்தினைக் காணும் கண்களா இவை?'' என ஏளனப் படுத்தப்பட்டன.

தமிழ் இனத்திற்கு எதிராக மேற்கௌள்ளப்பட்ட அரக்கத்தனமான இக்கொடுமைகளை முழு உலகமும்மே அப்போது கண்டனம் செய்தது. எத்தனை தொழிற் சாலைகள், வர்த்தக நிலையங்கள் ஏன் தனியார் மருத்துவ மனைகள் கூட அடித்து நொருக்கப்பட்டன.

1958 ஆம் ஆண்டில் காடையர் கூட்டம் காலி முகத்திடலில் மேற்கொண்ட தாக்குதலின் தொடர்ச்சியாக 1983 ஆம் ஆண்டில் அதே காலிமுகத் திடலில் தமிழர்களை ஒன்றரை அடி நீளம் கொண்ட இரும்புக்கம்பிகளால் தாக்கிக் கொன்றதும் பழங்கதைகளாக மாறிவிட்டன. அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பே இன்றைய யுத்தத்திற்கு வடிகாலாக அமைந்திருந்தது.

ஆனால் வேதனை என்னவென்றால் இந்த இன அழிப்புப் படுகொலைகள் முடிவடைந்து 16 ஆண்டுகள் கழிந்த பின்னரும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகள் எதுவும் காணப்படாத நிலையில் சமாதான யுத்தம், பாதைதிறப்பு என்ற பெயரில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது இன்றும் கூட நிறுத்தப்படவில்லை.

கறுப்பு ஜூலையில் பலியானோரின் நினைவாக திருகோணமலைக் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள நினைவு மண்டபம் இந் நினைவுகளில்நம்மையெல்லாம்அலைக் கழித்துக்கொண்டிருக்கும் போது திருகோணமலை நகரமே அன்று பற்றி எரிந்த நினைவுகளை திருகோணமலை வாசிகள் என்றும் மறந்துவிட மாட்டார்கள்.

1983 ஆம் ஆண்டு இரவு 9. 00 மணிக்கு இலங்கை வானொலியில் செய்திகளைக் கேட்ட திருகோணமலைவாசிகள் நகரமே அதிர்ந்தது போன்ற குண்டுச் சத்தங்களையும், துப்பாக்கி வேட்டுக்களையும் கேட்ட போது ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போவதாக உணர்ந்து கொண்டனர்.

ஒரு சில விநாடிகள்தான் நகரமே பற்றிஎரியத்தொடங்கியது. வீடுகள், உல்லாசப் பயணவிடுதிகள், வர்த்தக நிலையங்கள் எனப்பல கட்டடங்கள் எரியத் தொடங்கின. அதிகாலை 5 மணி வரை இந்தக் குண்டு வெடிப்புகளும் துப்பாக்கி வேட்டுக்களும் கேட்ட வண்ணம் இருந்தன.

மறு நாள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. திருகோணமலை, அம்பாறை, கொழும்பு எனத் தமிழர்கள் தாக்கப்படுவதும் கொல்லப் படுவதும் அவர்களது சொத்துக்கள் நாசமாக்கப்படுவதும் தொடர் கதையான நிலையில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு இன்னமும் காணப்படவில்லை.

ஒரு பக்கம் சமாதானத்திற்கான யுத்தம் என்று கூறி வரும் ஆளும் தரப்பினரோ இப்போது உணவுக்கு பாதை திறக்க வழி தேடுகின்றனர். கடந்த ஒன்றரை மாதகாலமாகவே இவ்வாறு உணவுக்குப் பாதை தேடும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

மனிதாபிமானம் கொண்டோரும் ஏனையோரும் உணவைப் போருக்கான ஆயுதமாகப் பயன்படுத்தாதீர்கள். கடல்வழியாகவேனும் உணவினை வழங்க ஆவன செய்யுங்கள் எனக் கோரிய போதிலும்கூட இந்தக் கோரிக்கைகள் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே மாறிவிட்டன.

வன்னிப் பெருநிலப்பரப்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# உயர்தர மாணவருக்கு பல வழிகளில் உதவுகின்ற ஒரு பொருளியல் நூல்

ப. சிவநாதன்
(யா. பல்கலைக்கழகம்)

நூல் வரிசை

[நூல்; பொருளியல்]
ஆசிரியர்: வே. கருணாகரன்

சர்வதேச வர்த்தகம், வர்த்தக மாற்று வீதம், வெளிவாரி விளைவுகள், பேரினப் பொருளாதாரம், அபிவிருத்திக் கொள்கைகள் என்னும் தலைப்புக்களில் கட்டுரை வடிவிலும், பயிற்சி வினாக்களை உள்ளடக்கிய வகையிலும் சிறுசிறு பிரிவுகளாக ஆசிரியர் வே. கருணாகரனால் வெளியிடப்பட்ட நூல்கள் க. பொ. த. உயர்தரப் பிரிவில் பொருளியல் கற்கும் மாணவர்களுக்கு உதவும் வகையில்அமைந்திருக்கின்றன

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பொருளியல் நூல்கள் பல உண்டு. தமிழ் மாணவர்கள் தமது பாடப் பரப்பிலுள்ள விடயங்களைத் தமிழில் வாசித்தறிவதற்குப் போதுமான நூல்கள் இல்லாத நிலையில் ஆசிரியரின் மேற்குறித்த தலைப்பிலான வெளியீடுகள் சுயமாகவும் விவேகமாகவும் கற்கும் மாணவர்களுக்குப் பெரிதும் உதவும்.

இலங்கையில் தேசியக் கல்வி நிறுவனத்தால் உயர்தர மாணவர்களுக்குப் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளிலும் ஆய்வுப் பட்டறைகளிலும் ஆசிரியர் வே. கருணாகரன் பங்கு பற்றியதால் உயர்தர மாணவர்களுக்கு முக்கியம் எனக் கருதப்படும் பகுதிகளை மையப்படுத்தி, விடயங்களைத் தொகுத்துப் பயிற்சி வினாக்களையும், கடந்த காலப் பரீட்சை வினாக்களையும் அதற்கான விடைகளையும் உள்ளடக்கிய வெளியீடுகளை மாணவர்களின் இன்றைய தேவைக்கு உதவும் வகையில் அமைத்துள்ளார்.

வாசித்தறியக்கூடிய இலகு தமிழில் இவை வெளியிடப்பட்டுள்ளதால் புதிதாகப் பொருளியலைக் கற்க விரும்பும் மாணவர்களுக்கும் இவை உதவக்கூடியதாக உள்ளன. அதிக புள்ளிகளைப் பெற வேண்டும் என்பதற்காக விடாமுயற்சியுடன் பாடசாலையிலும் மற்றும் பல தனியார் கல்வி நிலையங்களிலும் கல்வி கற்கும் மாணவர்கள் ஆசிரியரது இவ் வெளியீடுகளைப் படிப்பதனூடாகப் பல சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். குறிப்பாகப் பல்வேறு தலைப்புக்களிலான வெளியீடுகளாக இருந்தாலும் பரீட்சையில் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் அடிப்படை நோக்கம் இருப்பதை இவ் வெளியீடுகளின் உட்பிரிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

உயர்தர வகுப்பிற் பொருளியலைக் கற்பிக்கும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் வே. கருணாகரனின் இவ் வெளியீடுகள் மாணவர்களுக்குப் பல வழிகளில் உதவும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

★

# இராணுவக் கட்டுப்பாட்....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்கையான புனிதா என்ற கர்ப்பிணிப்பெண்ணும் கடத்திச் செல்லப்படுகின்றனர். அவர்களுக்கு என்ன நடந்ததென இதுவரை அறிய முடியவில்லை. முஹமட் உசேன் ஆபத்தான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவத்துக்கு யார் பொறுப்பு என்பது மர்மமாகவே உள்ளது.

அடுத்து கடந்த 11ஆம் திகதி நள்ளிரவில் பள்ளிமுனைப் பகுதியில் உள்ள வீடொன்று தட்டப்படுகிறது. வீட்டுக்காரர் கதவைத் திறந்தபோது அங்கேயும் ஆயுதம் தாங்கிய சிலர் முகத்தை கறுப்புத் துணிகளால் மூடியபடி காணப்படுகின்றனர். வந்தவர்கள் அந்த வீட்டில் உள்ள நெப்போலியன் என்பவர் எங்கே என்று கேட்கின்றனர். நெப்போலியன் என்பவர் மன்னார்ப் பகுதியில் உள்ள படையினருடன் நெருக்கமானவர். காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் எனக் கூறப்படுபவர். எனவே புலிகள்தான் அவரைத் தேடி வந்ததாக வீட்டுக்காரர்கள் நினைத்து பதற்றமடைகின்றனர். அதனால் நெப்போலியன் அங்கே இல்லை. வேறிடத்துக்கு படுக்கைக்குச் சென்றுவிட்டார் என்கின்றனர். உண்மையும் அதுதான். ஆனால் வந்தவர்களோ அதனை நம்பாதது போல் வீட்டைச் சோதனையிட முற்படுகின்றனர். வீட்டிலே உள்ளவர்களைப் பார்க்க வேண்டும் என்று அனைவரையும் வெளியே வரச் சொல்கின்றனர். அவ்வாறு வெளியே வந்தவர்களில் ஜூடா காமலேற்றா என்ற 25 வயது யுவதியை விசாரிக்க வேண்டுமெனக்கூறி மறித்து வைத்துவிட்டு ஏனையவர்களை இரு அறைகளில் போட்டுப் பூட்டிவிடுகின்றனர்.

வெளியே ஜூடா காமலிற்றா கொடூரமாகக் கற்பழிக்கப்பட்டபின் கத்தியால் வெட்டியும் சுட்டும் கொல்லப்படுகிறார். வந்தவர்கள் வந்த சுவடு தெரியாமல் திரும்பிச் சென்றுவிடுகின்றனர். பக்கத்துவீட்டுக்காரர்கள் சத்தம் கேட்டு ஓடி வந்து கதவைத் திறந்து வீட்டுக்காரரை மீட்டு இறந்து கிடந்த ஜூடாவை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் சடலத்தை சவச்சாலையில்ஒப்படைக்கின்றனர்.

பிரேதபரிசோதனை செய்த மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரி இம்மானுவல் பீரிஸ் தனது வைத்திய அறிக்கையில் ஜூடாவின் உதடு, மார்பகங்கள், கழுத்து என்பன பற்களால் ஆழமாகக் கடிக்கப்பட்டுக் கொடூரமாகக் கற்பழிக்கப்பட்டுள்ளதாகவும் கற்பழிக்கப்பட்டபின் அடி வயிற்றில் ஆழமாகக் கத்தியால் குத்தப்பட்டுள்ளதாகவும் அவரது உடலில் 16 காயங்கள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து இந்த சம்பவத்துக்குக் காரணமானவர்கள் அந்த வீட்டின் அருகிலுள்ள பள்ளிமுனைப் பகுதியிலுள்ள காவலரண் ஒன்றில் கடமையாற்றும் இராணுவத்தினர் என்பதை அடையாளம் காட்டப் பலரும் முன் வந்தனர். இதையடுத்து அந்தக் காவல் அரணில் கடமையாற்றும் 11 இராணுவத்தினர் அழைக்கப்பட்டுக் கடந்த 20 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. அதில் இருவர் அடையாளம் காணப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர். புதைக்கப்பட்ட ஜூடாவின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டுக் கொழும்புக்கு மேலதிக வைத்திய பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

ஜூடா காமலிற்றா முன்னர் புலிகள் இயக்கத்தில் ஒரு பொறுப்பு வாய்ந்த தளபதியாக இருந்தவர். பின்னர் இயக்கத்தைவிட்டு விலகி வந்தவர் என்றும்— கொல்லப்படுவதற்கு சில தினங்களுக்கு முன் இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் என்றும்—

சொல்லப்படுகிறது.

அடுத்து கடந்த 19 ஆம் திகதி மன்னார் சனிவிலேஜ் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவ வீரர்கள் இருவருக்கு விபரீத ஆசை ஏற்படுகிறது. அதனால் சைக்கிள் ஒன்றில் ஏறி இருவரும் கீரி என்ற தென்னந்தோட்டப் பகுதிக்குச் செல்கிறார்கள். அந்தப் பகுதி மன்னாரில் பனங்கள்ளுக்குப் பிரபல்யம் வாய்ந்த பகுதி. பனங்கள் குடிக்கும் ஆசையில் அங்கே அடிக்கடி இராணுவத்தினர் வந்து செல்வது வழமை. இதனை அவதானித்த புலிகள் அங்கு இராணுவத்தினருக்காக காத்திருக்கின்றனர்.

(தொடரும்)

# இன்னும் ஒரு . . .

[7 ஆம் பக்கத் தொடர்]

டன் போப்பாண்டவரின் இரு கரங்களும் தரையில் முழந்தாளிட்டு தலைதாழ்த்தி வணங்கிய பக்தர்களை ஆசிர்வதித்தன. வெற்றிக்கு அறிகுறியான பெருமிதமான புன்னகை அவர் முகத்தில் தவழ்ந்தது. உலகம் தப்பிவிட்டது!! கி. பி. 1,000 ஆம் ஆண்டு பிறந்து விட்டது.

1999 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதி மீண்டும் ஓர் உலகமுடிவு எதிர்வு கூறப்பட்டுள்ளது.

16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நொஸ்ரடாமுஸ் (NOSTRADAMUS) என்ற தீர்க்கதரிசி 1999 ஜூலை முடிவில் உலகம் முடியும் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இன்னும் ஒரு வாரத்தில் அவர் தீர்க்கதரிசிதானா என்று கணிக்கப்போகும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும்!?

அவரது கூற்று: ''ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றொன்பதாம் ஆண்டு ஏழாம் மாதத்தில் ஆகாயத்திலிருந்து ஓர் பயங்கர அரசன் (அசுரன்) வருவான் அதனால் ''அங்குளோ மொங்கலின்'' ஆட்சி உயரும் அதற்கு முன்னும் பின்னும் செவ்வாய் தடையில்லாமல் ஆளும்'' என்பதாகும்.

நொஸ்ரடாமுஸ் 1555 க்கும்—1566 க்கும் இடையில் தெரிவித்த எதிர்வுகூறல்கள் இன்று வரை உண்மையாகிவிட்டன.

1555 இல் ''நூற்றாண்டுகள்'' என்ற தலைப்பில் பல தீர்க்கதரிசனச் செய்திகளைத் தந்துள்ளார் நொஸ்ரடாமுஸ் பிரான்சின் அரச குடும்பத்தினரால் கௌரவிக்கப்பட்வர் எது எப்படியாயினும் 1999 ஆம் ஆண்டு கடைசி ஜூலையின் வாரத்தையாவது யாழ். மக்கள் தத்தம் கோயில்களில், பள்ளிகளில் பூசைகள் வழிபாடுகள் செய்வது அவசியம்.

0999 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஐரோப்பா எப்படி மனிதநேய கண்டமாக மாறியதோ, அப்படியே யாழ். சமூகமும் 1999 ஆம் ஆண்டு ஜூலை முடிவில் ஒரு புதுமை மிக்க சமுதாயமாக மாறிவிட முயற்சி செய்யவேண்டும். ஏமாற்றுவோர் ஏமாற்றப் படுவோர் இனியும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இல்லாமலாகட்டும். ஆவணி முதலாம் திகதி எம்மவர் சுபீட்சத்தையும் நற்சிந்தனையையும் ஆத்மசிந்தனையையும் பெற அவன் அருள் செய்வானாக.

வாழ்க 2000! [illegible]
நீங்குக எம்மவர் பீடைகள்!
பொலிக பொதுமை நோக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

**சங்கானை**

எஸ். சரசானந்தராஜா (104424 ஏ), ரீ. வேலுப்பிள்ளை (104432 ஏ), ஆர். செல்லையா (071606 ஏ), எஸ். பொன்னையா (071606 பீ), எஸ். சங்கரப்பிள்ளை (083659 ஏ), எம். சங்கரப்பிள்ளை (083659பீ), வீ. கார்த்திசன் (091557 ஏ), ஆர். எம். விசுவலிங்கம் (096391ஏ), டபிள்யூ. கண்ணபிரான் (097400 ஏ), கே. நிர்மலா (097400 பீ),

எஸ். கந்தசாமி [097401 ஏ), கே. கமலாம்பிகை (097401 பீ), கே, சபாபதி (099799 ஏ), எம். சிவபாலன் (100157 ஏ), கே. மகாதேவன் (100158ஏ), என். சந்ரமலர்தி (101310 ஏ), கே. நாகராசா (101310 பீ), வீ. நாகராசா (101310 சீ), கே. நடராசா (101368 ஏ).

எஸ். சின்னையா [101440 ஏ], எஸ். நித்தியானந்தர் [101444பீ], என். சிவானந்தராசா [101444சீ], எம். என். மதிவதனி [101444டீ], ஏ. தங்கராசா [101911ஏ], பீ. கொலன் [102003ஏ], எஸ். செல்வச்சந்திரன் [102028ஏ], எஸ். தர்மகுலசிங்கம் [102065 ஏ], எஸ். சிவசாமி [102065 பீ], ஜே. பூபசிங்கம் [102076 ஏ].

பீ. ஜெயராஜ் [102093ஏ], எஸ். சுசிலா [102103ஏ]4 ஆர். செல்லத்துரை [10210, ஏ], எஸ். வைகுந்தவாசம் [102106ஏ], வீ. சண்முகலிங்கம் [102205ஏ], எஸ். தியாகலிங்கம் [103249ஏ], ரீ. சகுந்தலா [103249பீ], ரீ. செந்தன் [103249சீ], ரீ. பரதன் [103249டீ], ஏ. எஸ். ஸ்கந்தராசா [103274ஏ].

யீ. எஸ். ஸ்கந்தராசா (103274 பீ), ஆர். கணேசராசா (103285), ரீ. ரீ. சிறோன்மன் (103326 ஏ), எஸ். கே. வதன் (103396ஏ), கே. ஞானதமணி (103396பீ) பீ. ரஞ்சினி (103430 ஏ), யீ. டிலக்‌ஷன் (103430 பீ), டீ. யோகராணி (103438 ஏ), பீ. நல்லையா (103442ஏ), ஐ. பூரணசற்குணம் (103443 ஏ).

ஆர். சிதம்பரப்பிள்ளை (103507 ஏ), எஸ். வைகுந்தவாசம் (103526 ஏ). ஆர், தேவராஸ் (103538 ஏ). கே. தவராசா (103590 ஏ), ரீ. கமலராணி (103590 பீ), ஆர். ஜெயராஜ் (103594 ஏ), எஸ். குணரத்தனம் (103595 ஏ), யீ. விஜயமாலா (103596 ஏ), ஆர். பரமேஸ்வரன் (103605 ஏ), பீ. ரத்னராஜா (103630 ஏ),

என். ஞானசேகரம் (103636 ஏ), பீ. ரஞ்சினி (103636 பீ), எஸ். சுபாதரன் (103642) ஏ), வீ. கிருஷ்ணயர் (1036659ஏ), எஸ். சக்திதாசன் (103725 ஏ), ஏ. பாலு (103811ஏ), ஜே. சிற்றம்பலம் (105079ஏ), எம். கௌரி (105104ஏ), எம். கஜனி (105104பீ), பீ. ஜெயபாஸ்கரன் (105105 ஏ),

ஐ. தருமலிங்கம் (105156 பீ), ரீ. கந்தையா (105158 ஏ), ஏ. பாக்கியம் (105177 ஏ), டீ. ஜோதிராணி (105218 ஏ), டீ. தர்மலிங்கம் (105218 பீ), டீ. ஐங்கரன் (105218 சீ), ஏ சிவபாதம் (105 32 ஏ), ஜே. ஈ. ஜெபசீலன் (105249ஏ), ஆர். ஜெயசீலன் (105249பீ), எஸ். மயில்வாகனம் (105257ஏ),

பீ. விநாயகமூர்த்தி (105257பீ). என், சிவகுரு (105273ஏ), கே. பாக்கியன் (105767பீ), எஸ். சுதாரன் (105772ஏ), டபிள்யூ க வேலுப்பிள்ளை (105682 ஏ), ஏ. பாலசுப்பிரமணியம் (105834ஏ), ரீ. தம்பித்துரை (105885ஏ), ரீ. தனுஷன் (105885பீ), ஆர். ஜே. விஜயகுமார் (105886ஏ), ஏ. பொன்னுத்துரை (105893ஏ),

பீ. செல்வநாயகம் (105985 ஏ), எஸ். வரியவதனன் (105994ஏ), கே. அன்பழகர் (106024ஏ), கே. மெலனி (106076ஏ), டீ. பிரதீபன் (106133ஏ), என் சேதுராஜா (106164ஏ), எஸ் சசிக்குமார் (106164பீ), என் மகேஸ்வரி (106195ஏ), என். உஷாநந்தினி (106195பீ), கே. நிஷாந்தன் (106195சீ).

எஸ் பாலசுப்ரமணியம் (106199ஏ), பீ சிவசங்கர் (106199பீ), ரீ தவனேஸ்வரன் (106244ஏ). யீ ஜீவநந்தன் (108621ஏ). ஜே நிநவங்கமலர் (108621பீ). ஐ சுப்ரமணியம் (108641ஏ). என் சாரங்கன் (108641பீ), ரீ பிரபாகரன் (108712ஏ). எம் சிற்சபேசா (108735ஏ). வீ. மீரா (108781ஏ).

என். கற்பரந்தன் (108871 ஏ), கே. ராஜ்கோபால் (108871பீ), வை. திருநாவுக்கரசு [108926ஏ], ஏ. சிறிலோகநாதன் [108927ஏ], எஸ் சிவதான் [108957ஏ], ஜே. நடராஜா [108957பீ], எஸ் ஜீவஸ்வரன் [108957 சீ], என். சிறிஸ்கந்தராஜா [108957டீ], கே. பாலமுதந்தன் [108957ஈ], ஆர். விஜபசேகரம் [108957எவ்]. ஏ. வேணுதாஸ் [108957யீ], வீ. செல்வகுமார் [108957 எச்], ரீ. சுகிர்தன் [108957 ஐ], எஸ் கமலதாசன் [108957ஜே]. எஸ். சஞ்சீவன் [108957கே], எஸ். சிவதான் [108957எல்], ஐ கணபதிப்பிள்ளை [108957 எம்], எஸ் விக்னேஸ்பரன் [108975ஏ]. [illegible] [illegible]. எஸ் [illegible] [109071 பீ]

[தொடரும்]

## சனசமூக நிலையங்களில்
# புதிய நிர்வாக சபைகளைத் தெரிவு செய்யக் கோரிக்கை

கொழும்புத்துறை, ஜூலை 25

யாழ். மாவட்டத்தில் அரச நன்கொடை பெறும் சகல சனசமூக நிலையங்களில் இவ்வருடம் 1999 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்யாத சன சமூக நிலையங்கள் யாவும் எதிர்வரும் ஒகஸ்ட் 14 ஆம் திகதி சனிக்கிழமைக்கிடையில் நிலைய பொதுக் கூட்டத்தைக் கூட்டுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் கிராம மட்டத்தில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு மிக மிக அவசியமானது என்றும்—

இயங்காதும், பொதுக் கூட்டம் கூட்டப்படாமலும் உள்ள நிலையங்கள் யாவும் நடப்பு ஆண்டுக்கு உரிய புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்து அது தொடர்பான விவரங்களை உள்ளூராட்சித் திணைக்களத்நுக்கும், யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்துக்கும், உபசமாசம், பிரதேச சபை சமாசங்களுக்கும் தவறாது அனுப்பி வைத்குமாறு யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களத்தின் தலைமைச் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த. பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

# போதிய தமிழ் பொலீஸாரை நியமிக்குமாறு கோரிக்கை
## தொல்லை தவிர்ப்பு குழுக் கூட்டத்தில்

கொழும்பு, ஜூலை 25

கொழும்பு மாவட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணக் கூடிய வகையில் போதிய தமிழ் பொலீஸ் அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று தொல்லை தவிர்ப்புக்குழு பாதுகாப்பு அமைச்சைக் கோரியுள்ளது.

தொல்லை தவிர்ப்புக் குழுவின் கூட்டம் ஒன்று அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி தலைமையில் நடைபெற்ற சமயம் இது தொடர்பான கோரிக்கை விடுக்கப்பட்டது.

கொழும்பு மாவட்டப் பொலீஸ் நிலையங்களுக்கு தமிழ் பொலீஸ் உத்தியோகத்தர்களை நியமிக்கும்படி நாம் கேட்டுக்கொண்டோம். ஆனால் பொலிஸ் நிலையங்களில் போதியளவு தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும் என அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி கூட்டத்தில் தெரிவித்தார்.

பொலீஸ் திணைக்களம் சார்பில் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிரேஷ்ட பொலீஸ்அத்தியட்சகர்ராபன் பதிலளிக்கையில், தொல்லை தவிர்ப்புக்குழு கேட்டுக் கொண்டதற்கு இணங்க தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் கொழும்பு மாவட்ட பொலீஸ் நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் இடமாற்றம் செய்ய தமிழ் பேசும் பொலீஸார் இல்லை. அண்மையில் பொலீஸ் திணைக்களம் ஆள்சேர்ப்பு செய்த பொழுது தமிழ் பேசுவோர் அக்கறை செலுத்தவில்லை எனக் குறிப்பிட்டார்.

அவ்வாறானால் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்கு பொலீஸ் திணைக்களத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பதை பகிரங்கமாக சுட்டிக் காட்டி மீண்டும் ஆட்சேர்ப்பு நடவடிக்கையை நடத்தினால் என்ன என அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி கேள்வி எழுப்பினார்.

அந்த விடயத்தை பாதுகாப்பு அமைச்சே தீர்மானிக்க வேண்டும் என்பதால் அது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் கவனத்தை ஈர்ப்பது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(ஐ-[illegible])

# கல்வி அலுவலகங்கள் திறப்பு

வடமராட்சி கல்வித் திணைக்களப் பிரிவில் ஏற்படுத்தப்பட்டுள்ள மூன்று கல்விக் கோட்டங்களுக்கான அலுவலகங்கள் அண்மையில் திறக்கப்பட்டன.

பருத்தித்துறை கல்விக் கோட்டத்திற்கான அலுவலகம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும் —

கரவெட்டிக் கல்விக்கோட்டத்திற்கான அலுவலகம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் —

மருதங்கேணி கல்விக்கோட்டத்திற்கான அலுவலகம் அம்பன் கமநலசேவை நிலையத்திலும்—

திறக்கப்பட்டுள்ளன.

(ஐ-118)

# பொருளியல் கருத்தரங்கு

வடமராட்சி, ஜூலை 25

ஜி. சீ. ஈ உயர்தர மாணவர்களுக்கான பொருளியல் பாடக் கருத்தரங்கு இன்று காலை 9 மணி முதல் 12 மணி வரை தும்பளை சிவப்பிரகாச ம. வியில் நடைபெறும்.

யாழ் கனகரத்தினம்மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் வே. கருணாகரன் இப்பாடம் தொடர்பான கருத்துரையை வழங்குவார்.

(ஐ-173)

# சமயப் பரீட்சை

வடமராட்சி, ஜூலை 25

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி மாணவர்களிடையே சமயப் போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

மஹோற்சவ காலத்தில் நடைபெற்றுவரும் தெய்வீகப் பேருரைகளை மையமாக வைத்து இப் போட்டி நடத்தப்படவுள்ளது.

கடந்த 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இம் மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன் கிழமை தீர்த்தோற்சவத்துடன் முடிவடைகிறது. இக் காலங்களில் தெய்வீகப் பேருரைகள் இடம்பெற்று வருகின்றன.

[ஐ-173]

# வெங்காயச் செய்கையால் விவசாயிகள் நஷ்டம்

வலி. கிழக்கு, ஜூலை 25

வலிகாமம் கிழக்குப் பகுதியில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

வெங்காயத்தினை ஏற்றுமதி செய்து சந்தைப்படுத்த முடியாமையே இந் நிலைமைக்கு காரணம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஒரு அந்தர் வெங்காயம் ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது அது 250 ரூபா விலைக்குக்கூட விற்க முடியாமல் திண்டாடுவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

வலி கிழக்குப் பகுதியில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட தம்பாலை, கதிரிப்பாய், பத்தமேனி, அச்சுவேலி, இடைக்காடு போன்ற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பெரிதும் நஷ்டத்தினை எதிர்நோக்கியுள்ளனர்.

(ஐ-180)

# கோழிகளுக்கு ஏற்றும் தடுப்பு மருந்து தட்டுப்பாடு

அளவெட்டி, ஜூலை 25

கோழிகளுக்கு ஏற்றப் படும் நோய்த் தடுப்பு ஊசி மருந்துக்கு குடா நாட்டு பகுதிகளில் கடந்த பல மாதங்களாகத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து இந்த ஊசிமருந்தைக் கொண்டு வருவதில் ஏற்படும் சிரமங்களே தட்டுப்பாட்டு நிலமைக்குக் காரணம் என்று தெரிவிக்கப் படுகிறது.

தற்போது நிலவி வரும் கடும் வரட்சி நிலை காரணமாக கோழிகளுக்கு அம்மை, மற்றும் தூக்க நோய் ஏற்பட்டு வருகிறது தொற்று நோயான இந்த நோயினால் கோழிகள் அதிகளவிலே இறந்து வருவதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கோழி வளர்ப்பிலே ஈடுபட்டவர்கள் பெரும் நஷ்டமடைந்து வருகின்றனர் முட்டை விலை அதிகரிப்புக்கு இதுவும் ஒருகாரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-13)

# கோட்ட பணிமனைகள் திறப்பு

நெடுந்தீவு, ஜூலை 25

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் கல்விக் கோட்டப் பணிமனைகள் விரைவில் திறக்கப்பட உள்ளன.

இக்கோட்டக் கல்விப் பணிமனைக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்களைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை கடந்த புதன்கிழமை தீவக வலயத்தில் நடைபெற்றது.

வேலணைக்கான கல்விக் கோட்டப் பணிமனை ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டுள்ளது

(ஐ-111)


**சங்கானை ப. நோ. கூ. சங்கம்**
(வ. உ)

**கூறு விலை கோரல்**

எமது சங்கத்தில் 3,564 வெற்றுச் சாக்குகளும், 9,460 வெற்றுப் பைகளும் விற்பனைக்கு உண்டு. மீளளிப்பு வைப்பாக ரூபா 1,000 செலுத்தி சங்கத்தினால் வழங்கப்படும் பத்திரத்தில் தங்கள் கூறுவிலைகளைக் குறிப்பிடு அரக்கு முத்திரையிட்டு 03-08-1999 -க்கு முன்னர் சங்கத்தில் ஒப்படைக்கவும்.

பொது முகாமையாளர்,
சங்கானை ப. நோ. கூ சங்கம்,
சங்கானை.

(சி/8'86)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

இல. 272, ஆனந்தன் வடலி வீதியில் உள்ள 8 பரப்பு வீட்டுடன் சேர்ந்த காணியும் செம்மணி வீதியில் 8 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சோ. சிற்றம்பலம் 272, ஆனந்தன்வடலி வீதி (A. V. Road), அரியாலை, யாழ்ப்பாணம். (67634)

34, 3 ஆம் குறுக்குத்தெருவில், 2 பரப்பும் 12½ குழியுடன் கொண்ட ஒரு பகுதி சேதமடைந்த நிலையில் உள்ள வீடுவிற்பனைக்குண்டு. நேரில் பார்வையிட்ட பின் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: S. சண்முகராஜா, மதிப்பாளர், 387, கோயில்வீதி, நல்லூர். சந்திக்கும் நேரம் காலை 9.00-க்கு முன்பும், மாலை 3 00-க்குப் பின்பும். (67537)

பல்சலைக்கழகத்தில் இருந்து 1km எல்லைக்குள் அமைந்த 5 அறைகளுடன்சகல வசதிகளுடனும்கூடியவீடு விற்பனைக்குண்டு. 35, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (67687)

## வீதித தடையுடன் மோதிய வாகனம்

கொழும்பு, ஜூலை 25

கொள்ளுப்பிட்டியில் ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு சமீபமாக போடப்பட்டிருந்த வீதித் தடையுடன் வான் ஒன்று மோதியதில் அங்கு பணியில் இருந்த 3 பொலீஸார் படுகாயமடைந்தனர்.

வெளியிடத்தில் இருந்து கொழும்பு நகர் நோக்கி வந்து கொண்டிருந்த இந்த வான் வீதித் தடையுடன் மோதியதையடுத்து — புலிகளின் வாகனம் வந்து விட்டது என்று அங்கு நின்ற படையினர் பரபரப்படைந்தனர்.

ஆனால் அந்த வான் பின்னர் அருகில் இருந்த மின்கம்பம் ஒன்றுடன் மோதி நின்றதும் அவர்கள் அமைதியடைந்தனர்.

மதுபோதையில் அந்த வான் சாரதி இருந்ததாகக் கூறப்பட்டது. (இ-3)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உதயத்தில் செவ்வாயும் 3 13/16 கிரக பாவமும் மிருகசீரிட நட்சத்திரமும் 30 வயதுமுடைய அரசாங்க நிரந்தர சேவையிலுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: சோதி திருமண சேவை, மணல் வளவு, பொலிகண்டி, வல்வெட்டித்துறை. [67665]

## வாடகைக்கு

மாணவர்களுக்கு அல்லது சிறிய குடும்பத்துக்குப் பகுதி வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: சிவாணுஷா கனகசபாபதி, 112, பலாலி வீதி, கந்தர்மடம். [யாழ். பல்கலைக் கழகம் அருகில்] [67644]

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அடைமுட்டையும் வாழைக் குட்டிகளும் உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (67699)

Broiler இறைச்சிக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: லக்கி, பலாலி றோட், இல 1, மதவடி லேன், திருநெல்வேலி. (67667)

இறைச்சிக்கோழி/Broilers/, கல்பேட்ஸ் என்பன எபமிடம் விற்பனைக்கு உண்டு சுத்தம் செய்து கொடுக்கப்படும் தொடர்பு:- இல. 40. கோயில் வீதி, யாழ்ப்பாணம் (67697)

## MATHS. ENGLISH

O L பரீட்சையில் Distinction Credit பெறுபேறுடைய ஆரம்பத்திலிருந்து இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் முதல்முறை தோற்றுபவர்களுக்கும் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன்கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி (67619)

## விற்பனைக்கு

பால் கறக்கும் "ஜேசி" மாடு முதலாம் ஈற்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 36, புங்கன்குளம் றோட், (குளத்திற்கு முன் வீடு) ஈச்சமோட்டை. (67668)

பந்தல் விற்பனைக்குஉண்டு. தொடர்பு: அ. நித்யானந்தன், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில். (67648)

சணல் ஆடுகள், வான்கோழி, கினிக்கோழி, மணித்தாரா, பொமனேரியன் நாயும் குட்டிகளும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லிங்கமூர்த்தி மயூரன், நவாலி, அரசடி மகாவித்தியாலயம் அருகில். (67672)

சொந்தப் பாவனையில் உள்ள Jialing J. H. 70 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கா. ஸ்ரீனிவாசன் மயிலணி வீதி, மயிலணி, சுன்னாகம். (67647)

ஜேர்மன் செப்பேட், ஐரிஸ் நாய்களும் ஜேர்மன் செப்பேட் அல்சேஷன் குட்டிகளும் பொமனேரியன் நாய்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 42, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். சந்திக்கும் நேரம்: ஞாயிறு காலை 7.30 — மாலை 5.00 மணி வரை. (67676)

சிகை அலங்காரக் கடைகளுக்குரிய புதிய கத்தி, கட்டர் மற்றும் பல பொருள்கள் (சிங்கப்பூர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு 154, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (67675)

நல்ல நிலையில் உள்ள Sony 20×60 TV விற்பனைக்கு உண்டு, தொடர்பு: சோ. சிவராசா, [குமார் தையலகம் அருகில்], 3 ஆம் கட்டையடி, கொக்குவில். (67695)

## மணமகன் தேவை

38 வயது இந்து கௌரவ குடும்பம் திருவோண நட்சத்திரம் ஆசிரியராகப் பணிபுரிபவருக்கு தகுதியான மணமகன் தேவை. விளம்பர இல. 917, மே/பா உதயன். (6.7681)

# கண்ணீர் அஞ்சலி

இந்தியாவில் சத்திர சிகிச்சையின்போது காலமான
மானிப்பாய் பொதுநூலக முன்னாள் நூலகரும்
வவுனியா பொது நூலகருமான

**செல்வி மல்லிகாராணி**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

ஊழியர்கள்,
யாழ். பொது நூலகம்

(சி/8292)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி 1999/2000

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும் ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க/அரச கூட்டுத்தாபன/தனியார் நிறுவனங்களில் அல்லது சுய தொழிலில் (விவசாயம், மீன்பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான "தொழிலாளர் கல்விச் சான்றிதழ்" கற்கை நெறிக்கு அனுமதி பெறுவதற்கு உரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விவரங்களையும் பல்கலைக்கழக சிறாப்பரின் கரும பீடத்தில் ரூபா 20 செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை நேரில் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பித்து அல்லது பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட இருபது ரூபாவுக்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயவிலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ 10 செ. மீ அளவிலதான கடித மேலுறையுடன் உதவிப்பதிவாளர்/தேர்வுகளும் அனுமதிகளும் கிளை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 31 08-1999. தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத் தேர்வு மூலமாகவும், நேர்முகத் தேர்வு மூலமாகவும் தெரிவு செய்யப்படுவர்.

குறிப்பு: 10 வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

— பதிவாளர்

(சி/ 8290)




ஓம் முருகா! ஓம் முருகா! ஓம் முருகா!

கடந்த 32 ஆண்டுகளுக்கு மேல்
தெய்வீக வழிபாட்டுக்குத் துணை புரியும்

காவடி மார்க் கற்பூரம்



யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும்.

விநியோகஸ்தர்கள்:-

PRABA TRADING CO.
31, GABOS LANE,
COLOMBO - 11.

Tel: 329426 Fax: 422750

நின்று நிலைக்கும் ஜோதிமயம்
காவடி மார்க் கற்பூரம் என்றும் தரும்!

(C/8122)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய..:

[6 ஆம் பக்கத் தொடர்]

சிறப்பாக அமைந்திருந்தது. சேவலாரின் நடிப்பு என் மனதைத் தொட்டுள்ளது. சேவலாரின் காலசைவும் தலையாட்டும் விதமும் உரையாடல் பாங்கும் சிறப்பாக அமைந்திருந்தன.

வேட உடை ஒப்பனையை நோக்கின் பாத்திரங்களுக்குப் பொருத்தமான உடையும் முகத்தில் குறியீட்டுப் பாங்கிலான ஒப்பனையும் பொருத்தமாக அமைந்திருந்தன. மிருகங்களாக வந்த கதாபாத்திரங்கள் மிருகங்களின் இயல்பிலான உடையையும் செவி, வால் என்பனவற்றையும் சேர்த்திருந்தார்கள். பாடகர்கள் குங்குமநிறத்தில் மேற்சட்டையும் கறுப்பு நிறத்தில் கீழ் அங்கியும் அணிந்திருந்தனர்.

காட்சியமைப்பாக அரங்கின் மத்திய மேடையிலும் இடப்பக்க முன் மேடையிலும் இரண்டுவீடுகள் முப்பரிமாண வடிவில் வைக்கப்பட்டிருந்தன. வலப்பக்க முன் மேடையில் ஒரு மரத்தை அட்டைப் படத்தில் வெட்டி முப்பரிமாணமாக வைத்திருந்தார்கள். மேடையின் கீழ்ப் பகுதியில் உண்மையான மரத்தை வைத்திருந்தார்கள். மண் வெட்டியையும் மேடையில் உபயோகித்தார்கள்.

முதற்றடவையாக தார்சீசியஸ் தயாரித்தபோது சேவல் பாத்திரமேற்று நடித்தார் க. சிதம்பரநாதன். இரண்டாவது தடவையாக க. சிதம்பரநாதன் தயாரித்தபோது நாயாகப் பாத்திரமேற்று நடித்தார் தே.தேவானந். இன்று இவர் நெறியாளராக உள்ளார். 'இந்த நாடகம் மூன்று தலைமுறையின் நெறியாள்கையையும் தயாரிப்பையும் சந்தித்து நிற்கிறது. நாடகக் கலையின் சந்ததிக் கடத்தலை அது கண்டு நிற்கிறது'' என்று குழந்தை ம. சண்முகலிங்கம் கூறுகிறார்.

நடிகராக, எழுத்தாளராக, நெறியாளராக விளங்குகின்ற தே. தேவானந் இன்று பல சிறுவர் நாடகங்களைத் தயாரித்து வருகிறார். மேலும் பல நாடகங்களை அவர் தயாரித்து அளிக்கவேண்டும். ★

## கறுப்பு ஜூலையின் இருண்ட...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பில் இன்னும் சில தினங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்புப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளதனை எதிர்பார்த்து தமது கல்வி நிலை தொடர்பாக வன்னிப் பெருநிலப்பரப்பிற்கானபாதைதிறக்கப்படாதா? உணவுப் பஞ்சம் நீங்காதா? நோயால் வாடி மெலிந்து கண்ணெதிரிலேயே மாயும் நிலைகளுக்கு முடிவு கட்டப் படமாட்டாதா? என ஏங்கித் தவிக்க —

வடக்கு—கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் வதியும் மக்களோ இந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வே கிடையாதா? எங்கள் வாழ்வு வளம் பெறமாட்டாதா? என ஏங்கித் தவிக்கிறார்கள்.

தமிழர் தம் அரிய சொத்தான யாழ். பொது நூலகம் அழிக்கப்பட்டது பாரம்பரிய தமிழர் பிரதேசமான திருகோணமலையின் புனித பிரதேசம் இன்று பொட்டிழந்து பூவிழந்த மங்கையாகக் காட்சி தருகின்றது.

புறநகர் பகுதிகளில் காணப்படும் இடிந்த கட்டடங்களும் பற்றைக் காடாக மாறிவரும் கிராமங்களும் கடந்த 16 வருடங்களுக்கும் முன்னர் நிகழ்ந்த அவலங்களை இன்றும் நம் கண்முன்னே காட்டுகின்ற நிகழ்வுகளாகவே உள்ளன.

திருகோணமலை நகரில் பாரம்பரிய கிராமங்கள் இன்று பற்றைக் காடுகளாக மாறிவரும் நிலையில் மக்களோ லட்சக்கணக்கில் நகரில் குவிந்து விட்டனர்.

1983 ஆம் ஆண்டில் 36 ஆயிரமாக இருந்த நகர மக்கள் தொகை இன்று 2 இலட்சத்துப்பத்தாயிரமாக மாறியுள்ளது, நகரில் குவிந்துள்ள மக்களின் தொகையினை தாக்குப்பிடிக்க முடியாது நகரம் திணறுகின்றது.

தமிழ் மக்கள் பெரும் பான்மையினராகவாழும் மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்கள் இவ்வாறே திணறிக்கொண்டிருக்கின்றன. பாரம்பரிய பிரதேசங்கள் பற்றைக் காடாக மாறியுள்ள நிலையில் கறுப்பு ஜூலை தினத்தில் கடவுளைப் பிரார்த்திப்போம் என அரசு அறிக்கை விடுத்திருந்தது.

நடந்து முடிந்த சம்பவங்களுக்கு தமது கவலையினைத் தெரிவிப்போர் நடந்து கொண்டிருக்கும் சமகாலப் பிரச்சினைகளுக்கும் இன்னும் தீர்வுகாண முடியவில்லை.

கறுப்பு ஜூலையின் சோகமயமான நினைவுகள் இன்றும் நம்மைவிட்டு மறையவில்லை. இன்னும் நாம் கறுப்பு ஜூலையின் இருண்ட பகுதியில் வெளிச்சத்தைத் தேடிக் கொண்டிருக்கின்றோம். ★


# மாருதி தளபாட நிலையம்
## மாருதி வெல்டிங் வேக் சொப்

❈❈❈❈❈❈❈!!!!!❈❈❈❈❈❈❈

◆ வீட்டுத் தளபாடங்கள் ◆ ஸ்ரீல் அலுமாரி ◆ ரீ.வி ஸ்ராண்ட் ◆ ஸ்ரீல் காரியாலய மேசை ◆ மெத்தைகள் ◆ பிளாஸ்ரிக் கதிரைகள் ◆ கூல்பார் மேசைகள் ◆ பைப் கதிரை ◆ குசன் செற்றிகள் மற்றும் ◆ வாடகைக் கதிரைகள் ◆ பந்தல்கள் ◆ கேற் கிறில் என்பன ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்.

618, கே. கே. எஸ் வீதி,
பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில் முன்பாக,
யாழ்ப்பாணம்.

(67702)



# கைமாறிவிட்டது

24 – 07 – 99 அன்று விமானத்தில் என்னுடன் பயணஞ் செய்த ஒருவர் தவறுதலாக எனது பிரயாணப் பையை மாறி எடுத்துச் சென்றுள்ளார். என்னுடைய பையில் போட்டோ அல்பமும் வேறு முக்கிய பொருள்களும் உண்டு. எனவே மாறி எடுத்துச் சென்றவர் கீழ்வரும் முகவரிக்கு வந்து எனது பையை என்னிடம் ஒப்படைத்து விட்டு தனது பையைப் பெற்றுச் செல்லுமாறு கேட்கின்றோம்.

செல்வி க. சுமதி,
55, சங்கிலியன் வீதி, நல்லூர். (67716)


## திருமுறைப் பெருவிழா

யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தில் ஆலய பரிபாலன சபையின் அனுசரணையுடன் அகில இலங்கைத் திருமுறை மன்றம் எடுக்கும் திருமுறைப் பெருவிழா எதிர்வரும் புதன்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

அகிலஇலங்கைத் திருமுறை மன்றத்தின் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

காலை 6 மணிக்கு அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் பன்னிருதிருமுறைகளுக்கு சோடச உபசார பூசையும் அதனைத் தொடர்ந்து திருமுறைச்சுவடி வீதியுலாவும் இடம்பெறும். விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன், பண்டிதர் தி. பொன்னம்பலம், சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை, கா. நித்தியானந்தன், பண்டிதமணி காலநிதி மு. கந்தையா ஆகியோர் உரையாற்றுவர்.

மகேஸ்வர பூசையும் நடைபெறும். (ஐ 103)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

'டொனால்ட் கணேஸகுமார்' வெற்றிக் கிண்ணத்துக்காக மகாநதி ரெக்ஸ் ரைல்ஸ் ஆதரவுடன் நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இதில் பற்றீசியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக அணி மோதவுள்ளது.

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டை ஒட்டி நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆண்கள் பிரிவு ஆட்டத்தில் சாந்த விநாயகர் வி. க. அணியை எதிர்த்து பல்கலைக்கழக கல்வி சாரா உத்தியோகத்தர் வி. க. அணி விளையாடவுள்ளது. (இ-9)

## கிருபைராஜா மறைவுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

புளொட் அமைப்பின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரும் அந்த அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமான செல்லையா கிருபைராஜாவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ஈ. பி. ஆர். எல்.எவ். அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது சமூகம் மிகமோசமான அன்றாட அவலங்களை சந்தித்துக்கொண்டிருக்கும் காலத்தில் நாம் கிருபைராஜா அவர்களை இழந்துள்ளோம். கிருபா மாஸ்டர் என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அவர் தமிழ் அரசியல் வட்டாரத்தில் களத்தில் நின்று சமூக சேவை ஆற்றியவர்.

மக்களின் பிரச்சினைகளை நேரடியாகச் சென்று அறிவதும் அதனை உரியவர்களுக்குத் தெரிவித்து தீர்வு காண முற்படுவதும் இல்லாவிடில் தான் சார்ந்த ஸ்தாபனத்தின் ஊடாகவும் இயக்கங்களின் ஐக்கியப்பட்ட செயற்பாட்டின் ஊடாகவும் போராட்டத்தை முன்னெடுப்பதிலும் உறுதி தளராது செயற்பட்ட மனிதர்.

நீரிழிவு நோயினால் அவதிப்பட்ட அவர், அதனையும் பொருட்படுத்தாமல் ஓய்வொழிச்சல் இல்லாமல் வேலைகளில் ஈடுபட்டவர்.

சமூக வேலைகளில் மாத்திரமல்லாமல் தனிப்பட்ட மனிதர்களின் இன்ப துன்பங்களிலும் சிரத்தையெடுத்து செயற்பட்டவர். அவர் இயக்கங்கள் இடையே ஐக்கியத்திற்காகவும் சமூகங்களிடையே ஐக்கியத்திற்காகவும் பாடுபட்டவர். எல்லோருடனும் இன்முகத்துடனும் சகஜமாகவும் பழகக்கூடிய அவரது இழப்பு மிகப் பெரிய வெற்றிடமே.

கிருபைராஜா அவர்கள் தமிழரசுக் கட்சி காலத்தில் இருந்தே அரசியலில் பிரவேசித்தவர். தமிழ் பேசும் மக்களின் போராட்டம் கருவி ஏந்திய போராட்டமாகப் பரிணமிந்தபோதும் இடைவிடாது அரசியலில் ஈடுபட்டவர்.

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்காக பொது வாழ்வில் ஈடுபட்டு 23-7-99 அன்று உயிர் நீத்த தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், யாழ். மாநகரசபை உறுப்பினருமான செல்லையா கிருபைராஜா அவர்களுக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவரது கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறோம்—என்றுள்ளது. (இ)

## பாலர் விளையாட்டு

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் சண்டிலிப்பாய் வடக்கு சிவசக்தி முன்பள்ளி பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 100 மணிக்குப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் தலைவர் அரியகுட்டி சின்னத்துரையின் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி கோ. திருநாவுக்கரசுவும், கௌரவ விருந்தினராகத் திட்ட இணைப்பாளர் க. குணேந்திரதாசனும் கலந்துகொள்வார்கள்.

## அணி ஒழுங்கு தெரிவு

யாழ்ப்பாணம். ஜூலை 25

''ஜோர்ஜ் வெப்ஸ்ரர்'' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படவுள்ள 6 பேர் 6 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அணி ஒழுங்கு தெரிவு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

விண்ணப்பித்த கழகங்களின் பிரதிநிதிகள் இதில் பங்குபற்றுமாறு வேண்டப்படுகின்றனர். (இ-9)

# இறை விசுவாசத்தின் தளராத உறுதி
# மன அமைதியைத் தரும் அருமருந்து

உலகில் பல புதிய கருத்துக்கள் தினம் தினம் வெளிவருகின்றன. அவற்றின் பலன் சமூக மேம்பாட்டுக்கென வெளிவந்த போதும், அதனை பயன் கொள்பவர்களோ அதனை நல்லது கெட்டது என உணரவும், பகுத்தறிந்து பயன்படுத்தவும், அவர்களின் மனங்கள் எத்திசைக்கு இட்டுச் செல்கிறதோ அவை மூலமே சமூகம் நன்மை, தீமைகளை அனுபவிக்கின்றதைக் காண்கின்றோம்.

இது போலவே விண்ணரசின் உண்மைகளை கிறீஸ்து உவமைகளாலே மக்களுக்கு தெரியப்படுத்தினார். அவற்றில் ஆழ்ந்த கருத்துக்கள் செறிந்து கிடக்கக் காணப்படுகின்றன. உவமைகளாலே பேசுவேன் என்றார் கிறீஸ்து. எல்லா உவமைகளையும் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பாவனைப் பொருள்களைக் கொண்டும், அவர்கள் செய்யும் தொழிலையும் வைத்தே உவமைகள் மூலமாக இறை அரசை வெளிப்படுத்தலானார்.

இறை வார்த்தைகள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் விதைக்கப்பட வேண்டும். பரப்பப்பட வேண்டும். அதை ஏற்கும் உள்ளங்கள் நற்செய்தி கூறுவதுபோல நல்ல நிலங்களாக இருந்தால் நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தரும். இறைவனின் வார்த்தைகள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் நல் எண்ணங்களாகப் பலனளிக்கவேண்டும் என்பதே இறை யேசுவின் விருப்பம்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

சில விதைகள் காய்ந்த நிலத்தில் விழுந்து பலனளிக்காதது போல் இறை வார்த்தைகள், உலக இச்சைகளிலும், ஆசாபாசங்களிலும் மூழ்கிக் கிடப்போரின் உள்ளங்களில் விழுந்தும், பலனளிக்க சாத்தான் விடுவதில்லை.

மனக்காயங்கள், கலக்கங்கள் நம்மை வாட்டினாலும் நற்செய்தியின் பிரகாரம் இறைவனில் கொண்டுள்ள விசுவாசத்தில் தளராது உறுதியுடன் வாழப்பழகிக் கொள்ள முயலவேண்டும்.

இறைவார்த்தையே நம்மை மீட்கும் செய்தி என்ற நூறு வீத நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

நாம் தினமும் பலவற்றைப் படிக்கின்றோம். அதில் என்ன எழுதியிருக்கின்றன. ஓரோ ஆபாசம், கொலை, கொள்ளை யுத்தம் ஆகிய பாதகச் செயல்களையே பார்த்து மனப்பதிவாகி அமைதியற்று சலித்துப் போகின்றோம். ஆனால் நற்செய்தி ஏட்டைத் திறந்து படித்தால் தொடக்கம் முதல் முடிவு வரை தமக்கு அமைதி அளிக்கும் நிம்மதி தரும் வாழ்வுக்கு வழிகாட்டும் வார்த்தைகளே அங்கு தரப்பட்டுள்ளன.

ஆகவே நற்செய்தியில் கூறப்பட்டதுபோல், ''உள்ளவனுக்கு கொடுக்கப்படும். அவனும் நிறைவு அடைவான்; இல்லாதவனிடத்தில் இருந்து உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்'' என்பு வாக்கிற்கொப்ப நல்ல நிலத்தில் விழுந்த நூறுவீத பலன் தரும் நல்விதைகளாக இறைவார்த்தையைக்கேட்டு உணர்ந்தவர்களாக இறை நம்பிக்கையில் வாழ முனைவோமாக.

பி. பி பிறின்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈடுசெய்ய...

(முதலாம்பக்கத் தொடர்)

தேசிய இனத்தின் அரசியல் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க எமது கழகத்தில் தன்னையும் இணைத்து அர்ப்பணிப்புடன் செயலாற்றிய ஓர் மாமனிதனை நாம் இழந்து நிற்கின்றோம்.

எமது மக்களினால் கிருபா மாஸ்டர் என்று அன்பாக அழைக்கப்பட்டு மக்களையும் மண்ணையும் நேசித்த அன்னாரின் தியாகம் நிறைந்த போராட்டப் பாதையினை நாம் என்றும் மறந்துவிட முடியாது.

அன்னார் போராட்டத்தில் மக்களையும் இணைத்துக் கொள்ள எமது கழகத்தின் பிரசார செயலாளராகவும், எமது கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராகவும் இறுதி வரை உழைத்தவர்.

மக்கள் சேவையில் மங்காப் புகழ் பெற்ற தோழர் கிருபா அவர்கள் யாழ். மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்டபோதிலும் மாநகர சபையின் அனைத்துக் கட்சி உறுப்பினர்களாலும் மதிப்புக்குரியவராகத் திகழ்ந்தவர்.

யுத்தத்தின் அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த யாழ். குடாநாட்டு மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர வேண்டும், போரின் கொடுமையால் ஏற்பட்ட அழிவுகளையும், சிதைவுகளையும் புனரமைக்க வேண்டும் என்ற நோக்கில் யாழ். குடாவின் அபிவிருத்தியில் அக்கறையுணர்வுடன் அனைத்து அமைப்புகளுடனும் கட்சிபேதமின்றி ஐக்கியப்பட்டு உழைத்த தியாகச்சுடர் 23-07-99 அன்று நோய் எனும்பிணியினால் அணைந்து விட்டது.

இந்தக் கொடிய யுத்தத்தின் காரணமாக வடக்கின் எல்லைப் புறமான வவுனியா பிரதேசத்தில் எமது மக்களின் பெரும்பான்மை பலவீனப்படுத்தப்படக்கூடாது என்ற தொலைநோக்குப் பார்வையில் தனது எண்ணங்களையும் கருத்துக்களையும் செயற்படுத்துவதில் வவுனியா பிரதேச மக்களின் இதயங்களில் கிருபா இரண்டறக் கலந்தவர் இதன் பயனாக வவுனியா பிரதேச மக்களினால் ஈர்க்கப்பட்டு நகரசபையில் அங்கம் வகித்து மக்கள் பணியில் தோள் கொடுத்தவர்.

இது தவிர வவுனியாவில் மக்களுடன் மக்களாக எமது கழகம் தனது அரசியல் ரீதியிலான போராட்ட நடவடிக்கைகளை நெறிப்படுத்திய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முன்னணி வகித்து செயற்பட்டதில் தோழர் கிருபாவின் பங்கு அளப்பரியது.

அது மட்டுமல்லாது மலையகத் தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை வென்றெடுக்க மலையக மக்களே போராடவேண்டும் அம்மக்களின் போராட்டத்தை உணர்வுபூர்வமாக நெறிப்படுத்த நாம் பின்புலமாக செயற்படவேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டை கிருபா கொண்டிருந்தவர்.

எனவேதான் வடக்கு — கிழக்கு பிரதேசத்தில் நடைபெறுகின்ற ஆயுதப்போராட்டத்துக்கு மலையக மக்கள் பகடைகளாக்கப்படக்கூடாது என்று யதார்த்தபூர்வமாக எடுத்துக்காட்டி அம்மக்களின் கல்வி, கலாசாரம், சமூக நாகரிகம் போன்றவை சிதைவுறாது பேணிக்காக்கப்பட வேண்டுமென்ற நோக்கில் தனது ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்து வந்தார்.

தமிழ் மக்களின் முழுமையான விடுதலையில் தம்மை அர்ப்பணித்த போராட்ட அமைப்புகள் தமக்குள் மோதி அழிவதினைக் கண்டு ஆத்மார்த்தமான தனது வேதனைகளைச் சகோதரப் படுகொலைகள்நிகழும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கண்டனங்களாகவெளிப்படுத்தியவர்

போராட்ட சக்திகள் மக்கள் நலனுக்காக ஐக்கியப்பட வேண்டுமென்ற உன்னத இலட்சியத்தை இலக்காகக் கொண்டுஇறுதிவரைஐக்கியத்தின் அவசியத்தைகழகத்துக்கு மட்டுமல்லாது சக அமைப்புக்களிடையேயும் வலியுறுத்தியவர். போராட்டப் பாதையில் கழகத்தின் இழப்புகளின் வரிசையில் தோழர்கிருபாவின் இழப்பு ஈடுசெய்ய முடியாத தொன்றாகும்.

அன்னாரின் இழப்பினால் துயருறும் இலட்சோப லட்சம் மக்களுடன்நாமும் இணைந்து அன்னாருக்கு எமது புரட்சிகர அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

எமது இன்றைய புதிய வெளியீடு!

பிரகாஸ்ராஜின் வித்தியாசமான நடிப்பில்

மிஸ்ரர் - Z

எமது நாளைய வீடியோ CD வெளியீடு!

சுயம்வரம்

சுப்பஸோ வீடியோ

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/8287)

சுயம்வரம்

வீடியோ பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம்,

ஆர்க்வீடியோ லைபிறறி

(67718)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் சங்கத் தலைவர் கே. பேரம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்

எமது கோரிக்கைகள் நிறைவேறாது விட்டால் அண்மையில் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை செயற்பாடுகளிலும் நாம் கலந்துகொள்ளப்போவதில்லை என்றும் இவர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் ஒதுக்கப்பட்டுள்ள 15 கோடி ரூபா நிதி அம்பாறை மாவட்டத்துக்கு மட்டுமல்ல சகல மாவட்டங்களுக்கும் முழுமையாக வழங்கப்படவேண்டும் என்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இடர்கால கொடுப்பனவுக்காக மாகாண திறைசேரியினால் வழங்கப்பட்ட 15 கோடி ரூபாவுக்கான காசோலை மீளப் பெறப்பட்டதற்கு வடக்கு—கிழக்கு மாகாண ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க திருகோணமலை கிளை ஆகியவை பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

வடக்கு — கிழக்கு பகுதிகளிலுள்ள சகல ஆசிரியர்களுக்கும் சமமான முறையில் இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என்று இந்தச் சங்கங்களின் பிரதிநிதிகள் மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வாறு செய்யாத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாகவும் இந்தச் சங்கங்கள் எச்சரிக்கை செய்துள்ளன.

(இ-5)

## மட்டக்களப்பில்...

[முதலாம் பக்கத் தொடர்]

பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது காயமடைந்த இராணுவச் சிப்பாய் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போது அங்கு உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்தார் அத்துடன் ஓட்டோ ஒன்றும் சேதமடைந்தது.

(இ-9)

## ஆய்வுகூட...

(முதலாம் பக்கத் தொடர்)

வீசுவதாகவும் அதனால் தாம் அங்கு கடமையில் ஈடுபட முடியாதிருப்பதாகவும் ஆய்வுகூட உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை துர்நாற்றம் வீசுவதற்கு ஏதுவாக இருந்த இரு சடலங்கள் நேற்று முன்தினம் அப்புறப்படுத்தப்பட்டு அதி உச்ச சுத்திகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்—

பிரேதஅறைக்கு பொலீஸாரால் ஒப்படைக்கப்படும் பிரேதங்களை இரண்டு நாள்களுக்குள் அப்புறப்படுத்தத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள யாழ். மாவட்ட பொலீஸ் நிலையங்களுடனும் நீதி மன்றங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளதாகவும் — நிர்வாகமட்டத்தில் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் நேற்று முன்தினம் வெளிநடப்புச் செய்த இரத்த வங்கி உத்தியோகத்தர்கள் நேற்று வழமைபோல தமது கடமைகளை மேற்கொண்டனர்.

(இ)

விற்பனையாகின்றன!

அனைத்து தென்னிந்திய சஞ்சிகைகள் ஜூலை முதல் வாரம் வரையானது.

- # Sport Star, Front Line
- # தமிழ் கொம்பியூட்டர், ஹெல்த்
- # ராணி காமிக்ஸ், பாலமித்திரா
- # சினிமா எக்ஸ்பிறஸ், பக்தி குமுதம்

உட்பட மொத்த சில்லறை வியாபாரம்.

மண்டேலா ரேடர்,

2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(67678)

றோயல் சாவகச்சேரி.

பொருளியல் – S.வரதராஜன்

A/L 2000 பொருளியல் II

பணமும் வங்கியும்

ஆரம்பம்: 27 – 07 - 99

3-30 p. m.

A/L 2001 – பாடஅலகு 2

சந்தைப் பொருளாதாரம்

ஆரம்பம்: 26 – 07 – 99

Mon. 4-30 p. m.

– நிர்வாகி

(67704)

# உழவு இயந்திரம் மீது தாக்குதல் மன்னாரில் 3 படையினர் பலி

மன்னார். ஜூலை 25

மன்னார் மடுப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது 3 படையினர் உயிரிழந்தனர் என்றும் ஒருவர் காயம் அடைந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் உழவு இயந்திரம் ஒன்றின் பின்னால் பொருத்தப்பட்டிருந்த நீர்த் தாங்கி ஒன்றின் மீது புலிகள் நடத்திய தாக்குதலின் போதே இவர்கள் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகம் தெரிவித்தது.

(இ-9)

# ஆணைக்குழு இணைப்பதிகாரி படையணிகளுக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தென்மராட்சிப் பகுதியிலுள்ள கிளாலி, கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய மூன்று பிரிகேட் பிரிவுகளுக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீதரன் கடந்த விபாழனன்று விஜயம் செய்தார்.

முதலில் சாவகச்சேரி 521 ஆவது பிரிகேட்டுக்கு சென்ற அவர் பிரிகேட் தளபதி கேணல் சமரவீரவைச் சந்தித்து மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக பேச்சு நடத்தினார்.

நாவற்குழியில் காணாமல் போனதாகக் கூறப்படும் கனகலிங்கம் மனோகரன் (பாடசாலைஒழுங்கை, நாவற்குழி) என்பவர் விசாரணைக்காக 513 ஆவது கட்டளைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்ட பின்பு நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டதாக கேணல் சமரவீர தெரிவித்தார்.

கொடிகாமம் 522 ஆவது பிரிகேட் தளபதி கேணல் ராஜகுருவைச்சந்தித்து படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறையில் இருக்கும் தமது பிள்ளைகளையோ அல்லது கணவன்மாரையோ பார்வையிடச் செல்வதற்கு இராணுவப் பிரிகேட்டினால் அனுமதி மறுக்கப்படுகிறது என்று தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த கேணல் ராஜகுரு சந்தேக நபர்களின் உறவினர்கள் கொழும்பு செல்வதற்கு தாம் ஒருபோதும் தடையாக இருக்கப்போவதில்லை என்று தெரிவித்ததுடன் தமது பிரிவில் போக்குவரத்து அனுமதியைக் கவனிக்கும் சிவில் அலுவலக அதிகாரி கப்டன் அலக்ஸ் சாண்டரை நேரில் அழைத்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி குறிப்பிட்ட விடயத்தைக் கவனத்தில் எடுக்குமாறு கூறினார்.

வரணிப் பகுதியில் இருந்து அண்மையில் 5 இளைஞர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்ததாகவும் அதில் இருவர் தம்மிடம் சரணடைந்ததாகவும் சரணடைந்தவர்களை மீண்டும் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

கிளாலி (523) பிரிகேட்டில் மேஜர் ஜெயக்கொடியைச் சந்தித்து மனிதஉரிமைகள் பற்றி ஸ்ரீதரன் கலந்துரையாடினார்.

(இ-5)

## மற்றொரு...

[முதலாம் பக்கத் தொடர்]

பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.

இதில் வன்னிப் பெருநிலப் பரப்புக்கான போக்குவரத்து, உணவு, மருந்துத் தடையை ஏற்படுத்தி அதனை போராயுதங்களாகப் பாவித்து, இராணுவ நடவடிக்கைக்கு சாதகமான சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கின்றது.

இவ்வாறான சூழ்நிலை தொடர்ந்தும் நிலவுமானால் உலகில் இன்னுமொரு சோமாலியாவாக வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் மக்கள் மாறவேண்டிய நிலை ஏற்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-9)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வேண்டிய நோயாளர்களில் இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் —

மல்லாவி, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிகளில் மேலும் பல அவசர நோயாளர்கள் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கின்றனர் என்றும் — வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாடற்றபகுதிக்குமான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டு நாளையுடன் ஒரு மாதமாகிறது.

வன்னி மக்களுக்கு உணவு, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்களை கொண்டு வருவதற்கான ஒரே ஒரு மார்க்கமாக இருந்த மன்னார்—உயிலங்குளம் பாதை போர்க்கோஷம்–4 இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த மாதம் 26 ஆம் திகதி மூடப்பட்டது.

(இ-9)

## கப்பலில் பொருள் அனுப்புவோருக்கு

காங்கேசன்துறை துறைமுகத்தில் தற்போது பொருள்களை இறக்கிக்கொண்டிருக்கும் 'குமண கப்பல் இன்னும் ஓரிரு தினங்களில் புறப்பட உள்ளது.

இக்கப்பலில் பொருள்களை அனுப்ப விரும்புவோர் மாவட்ட செயலகத்தின் புனர்வாழ்வுப் பகுதியுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு திட்டப்பணிப்பாளர் செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

(ஐ-ரி)

## பூநகரி நோக்கி ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 25

நேற்று அதிகாலை 5 மணி முதல் பூநகரிப் பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் பற்றி தெரிய வரவில்லை,

## தாமதித்து...

(முதலாம் பக்கத் தொடர்)

சேர இரவு 9,00 மணி ஆனதால் பிரஸ்தாப பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

(இ)

## கிருபைராஜாவின்...

(முதலாம் பக்கத் தொடர்)

படும்.

அங்கு நடைபெறும் அஞ்சலியின் பின்னர் பூதவுடல் அனுராதபுரம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து விமானம் மூலம் நாளை காலை யாழ்ப்பாணம் வந்தடையும்.

யாழ்ப்பாணத்தில் நாளை காலை யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அவரின் தாயாரின் இல்லத்தில் பூதவுடல்வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும்.

மற்றும் ஏற்பாடுகள் குறித்து இன்று அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கிருபைராஜாவின்பூதவுடல் நேற்று மருதானையில் உள்ள றுகுணு மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது. அவரது மரணத்துக்கு மாரடைப்பே காரணமென்று வைத்திய அறிக்கை தெரிவிப்பதாக கொழும்பில் புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25 - 07 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org